
# மாலை தீப்பொறி

MALAE THEEPORI



மே-5 மார்க்ஸ் பிறந்த தினம்!

2024 மே 1-15 தொகுதி 22 இதழ் 15 விலை ரூ:10 ஆண்டு சந்தா ரூ:200

## சர்வாதிகாரியை அரியணையிலிருந்து அகற்றுவோம்!



# தோழர் டாக்டர் லக்ஷ்மி நாராயணா

# செவ்வணக்கம்!



மனித உரிமைகள் மற்றும் சாதி எதிர்ப்புச் செயற்பாட்டாளரும் கர்நாடக சிபிஐஎம்எல் கட்சியின் நீண்டகாலத் தலைவர்களில் ஒருவருமான டாக்டர் வி லக்ஷ்மி நாராயணா அவர்கள் 22 ஏப்ரல் 2024 அன்று இரவு 11.30 மணியளவில் மைசூரில் காலமானார். தோழர் லக்ஷ்மி நாராயணா ஒரு தோல் மருத்துவர்.

நக்சல்பாரி விவசாயிகள் எழுச்சியின் தாக்கம் கர்நாடகாவில் எதிரொலித்த பின்னணியில், தோழர் லக்ஷ்மி நாராயணாவின் அரசியல் பயணம் துவங்கியது. கர்நாடகாவில் மார்க்சிய -லெனினிய இயக்கத்தின் முதுபெரும் தோழரான லக்ஷ்மி நாராயணா, சிவில் உரிமைகள் மற்றும் சமூக நீதியின், சாதி எதிர்ப்பு நீரோட்டத்தின் தீவிர மார்க்சியப் போராளி. அவர் மக்கள் சிவில் உரிமை கழகம், இந்திய மக்கள் முன்னணி, இந்திய மார்க்சிய ஆய்வுக் கழகம், அகில இந்திய மக்கள் மேடை (AIPF) ஆகியவற்றுடன் நெருக்கமாக இணைந்து, தீவிரமாக பணியாற்றி வந்தார்.

நாட்டில் கம்யூனிஸ்ட் மற்றும் ஜனநாயக இயக்கம் எதிர்கொள்ளும் தத்துவார்த்த, சித்தாந்த பிரச்சனைகள் குறித்து பல்வேறு விவாத அமர்வுகளை மைசூரில் அவர் தொடர்ச்சியாக நடத்தி வந்தார். சமூக மாற்றத்திற்கான மார்க்சியக் கருத்துக்களைப் பரப்புவதிலும் இளம் கம்யூனிஸ்ட் செயற்பாட்டாளர்களுக்கு மார்க்சியக் கல்வியை வழங்குவதிலும் அவர் ஆர்வமாகச் செயல்பட்டார். சிபிஐஎம்எல் விடுதலையின் கர்நாடக மாநிலக் குழுவின் நீண்டகால உறுப்பினரான தோழர் லக்ஷ்மிநாராயணா, கட்சிப் பத்திரிகையான கன்னடா லிபரேசன் ஆசிரியர் குழுவின் உறுப்பினராக முக்கிய பங்காற்றி வந்தார். கட்சியின் மத்திய கல்வித் துறை உறுப்பினராகவும் இருந்தார்.

தோழர் லக்ஷ்மிநாராயணாவின் இணையர், தோழர் ரதிராவ், (பெண்கள் விடுதலை இயக்கத்தின் நன்கு அறியப்பட்ட செயற்பாட்டாளர், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தேசியத் தலைவர்) அவர்களோடு மைசூரில் வாழ்ந்து வந்தார். அவரது ஒரே மகன் அபூர்வா ஜெர்மனியில் வசிக்கிறார்.

தோழர் லக்ஷ்மி நாராயணா அவர்களுக்கு சிபிஐஎம்எல் கட்சி மத்தியக் குழு தனது மதிப்புக்குரிய அஞ்சலியை செலுத்துவதுடன், தோழர் ரதிராவ் அவர்களுக்கும், தோழர் லக்ஷ்மிநாராயணாவின் அன்புக்குரியவர்கள், தோழர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## தமிழ் கற்ற லக்ஷ்மி

மைசூரில் ஊட்டி எஃப் எம் எளிதாக கிடைத்து வந்ததால் தோழர் லக்ஷ்மிநாராயணா தினசரி தமிழ் செய்திகள், பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். அதில் ஆர்வம் அடைந்து, கடைசி காலத்தில் தமிழ் எழுதவும் படிக்கவும் கூட முயற்சித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாம், மூன்றாம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகங்களையும் சமீபத்தில் வாங்கி வைத்திருக்கிறார். தமிழர்களுக்கும் கன்னடர்களுக்கும் இடையில் முரண்பாட்டுக்குக் காரணமான, சிக்கலான காவேரி பிரச்சனையின் மையமான மைசூரில் இருந்து கொண்டு, வெறுப்பு ஏதுமின்றி, தமிழ் கற்க முயற்சித்து, நட்பு பாராட்டிய தோழர் லக்ஷ்மிநாராயணா கம்யூனிஸ்ட் விழுமியங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

## அஞ்சலி கூட்டம்

தோழர் லக்ஷ்மிநாராயணாவின் நினைவஞ்சலிக் கூட்டம் மைசூரில் மே2ம் தேதி நடைபெற்றது. இந்த அஞ்சலிக் கூட்டத்தில் சிபிஐஎம்எல் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர், கர்நாடகா மாநிலச் செயலாளர் தோழர் கிளிஃப்டன் ரோசரியோ மற்றும் பிஆர்எஸ் மணி உரையாற்றினார்கள். அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தேசியத் தலைவர் தோழர் ரதிராவ் உள்ளிட்ட பலர் அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



மாலை தீப்பொறி

இருவார இதழ்
*2024 மே 1 - 15*
தொகுதி 22 இதழ் 17

முதன்மை ஆசிரியர்
**சங்கர் .வீ**

ஆசிரியர்
**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு
**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்
**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

# பாஜகவும் மஜதவும் பெண்களின் காவலர்களாம்!

ஆர்எஸ்எஸ்-பாஜக என்றால் இந்துத்துவ மதவெறியும் கார்ப்பரேட் பணிவெறியும் ஒரு புறம் என்றால், மோசடிகள், பொய்கள், பித்தலாட்டங்கள், பாலியல் குற்றங்கள் இன்னொருபுறம். மன்னராட்சி கனவில் இருந்த மோ(மு)டி அரசரின் கனவு பலிக்காமல் போய்விடும் என்ற பயம் வந்தவுடன் வாய்க்கு வந்தபடி வெறுப்பையும் விஷமத்தையும் கக்குகிறார். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் இந்துப் பெண்களின் தாலி இருக்காது என்று பேசுகிறார். ராகுல் பிரதமராக வேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புகிறது என்று பிதற்றுகிறார். மணிப்பூரில் இரண்டு பெண்களை ஆடைகள் இல்லாமல் அழைத்துச் சென்று வன்கொடுமை செய்தபோது கண்ணையும் காதையும் பொத்திக் கொண்ட இந்திய நாட்டின் பிரதமர், ஆசிபாவை கோவிலுக்குள் வைத்து பாலியல் வன்கொடுமை செய்து கொடூரமாகக் கொன்றவர்களை, அந்தக் கொலைகாரர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் போன பாஜக தலைவர்களை, கண்டிக்காத இந்த நாட்டின் பிரதமர் மோடி இப்போது இந்துப் பெண்களுக்காக கண்ணீர் வடிக்கிறார். கர்நாடகாவின் ஹாசன் தொகுதியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும் அதே தொகுதியில் மீண்டும் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள பாஜக கூட்டணிக் கட்சியான மதச்சார்பற்ற ஜனதா தளத்தின் வேட்பாளரும் முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் பேரனுமான பிரஜ்வல் ரேவண்ணாவின் பாலியல் வன்முறை, வக்கிரக் கொடூரங்கள் வெளிவந்து ஒட்டு மொத்த இந்தியாவும் அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கிறது. இப்போதும் எதுவும் நடக்காததுபோல் மவுனம் காக்கிறார் இந்திய பிரதமர் மோடி. கிட்டத்தட்ட 3000 பெண்களை, தன்னிடம் உதவி கேட்டு வந்தவர்களை வன்கொடுமை செய்திருக்கிறார் பிரஜ்வல் ரேவண்ணா. இதில் பெரும்பான்மையோர் இந்துப் பெண்கள்தான் என்பதை மோடி, ஷா உட்பட யாரும் மறுக்கமுடியாது. பிரஜ்வல் ரேவண்ணா மட்டுமின்றி, அவரது அப்பா எச்.டி. ரேவண்ணாவும் பெண்களை குறிப்பாக தங்கள் வீட்டில் வேலை செய்த பணிப் பெண்களை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார் என்று புகார் அளிக்கப்பட்டு, இருவர் மீதும் தற்போது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்துப் பெண்களுக்காக குரல் கொடுப்பதாகச் சொல்லும் மோடி மட்டுமல்ல, பெண் நிதியமைச்சரான நிர்மலா சீதாராமனோ, பாஜக அரசின் பெண்கள் நல மேம்பாட்டு அமைச்சரான ஸ்மிருதி இராணியோ, பாஜக மகளிர் அமைப்புப் பொறுப்பாளர்களான குஷ்புவோ, வானதி சீனிவாசனோ இன்று வரை வாய் திறக்கவில்லை. பிரஜ்வல் ரேவண்ணாவை சத்தமில்லாமல் வெளிநாட்டிற்கு அனுப்பியும் வைத்துள்ளார்கள். ரேவண்ணாவின் லீலைகள் பற்றி முன்னமே தெரிந்திருந்தும் இந்த நாட்டின் பிரதமர் கர்நாடகாவில் ரேவண்ணாவிற்காக அவரின் தோள் மேல் கைபோட்டு வாக்கு சேகரித்தார் என்பதுதான் கொடுமையிலும் கொடுமை. இந்த மோடி அவர்கள்தான் 'மகள்களைக் காப்போம்' என்று கண்ணீர் சிந்தி வாக்குகள் கேட்டு வருகிறார். தேவகவுடாவின் சொந்த ஊரான ஹோலேநரசிபுராவில் அவரது குடும்பத்தினர் பற்றி வாய் திறந்து

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...

# சர்வாதிகாரியை அரியணையில் இருந்து விரட்டுவோம்!




பாஜக தனது பாசிசக் கோரப்பற்களை உலகுக்கே காட்டிட முதல் கட்ட தேர்தலே போதுமானதாகிவிட்டது. முதல் கட்டத் தேர்தலில், வாக்களித்தோர் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சிதான் பேசப்பட வேண்டிய முக்கிய விசயமாகியிருக்கிறது. பதினாறு மாநிலங்கள், நான்கு ஒன்றிய பகுதிகளின் (யூனியன் பிரதேசங்கள்) 102 தொகுதிகளுக்கான முதல் கட்டத் தேர்தல் நடைபெற்றது. ஏழு கட்ட மக்களவைத் தேர்தல்களில் இதுவே அதிக தொகுதிகளைக் கொண்ட கட்டமாகும். இதில் கிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும் வாக்களித்தோர் எண்ணிக்கை அய்ந்து விழுக்காடு வீழ்ச்சியடைந்துள்ளது. பாஜக/தேசிய ஜனநாயக கூட்டணியின் (என்டிஏ) வசமுள்ள தொகுதிகளில்தான், எதிர்க் கட்சி கூட்டணி தொகுதிகளை விட, வாக்களித்தோர் எண்ணிக்கை அதிக வீழ்ச்சி அடைந்திருப்பதாக அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

வாக்களித்தோர் எண்ணிக்கையில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சி என்பது பாஜக வாக்காளர்களிடம் நிலவிய விருப்பமின்மை, உற்சாகமின்மையின் பிரதிபலிப்பு என்பது தெளிவாகிறது. 2014, 2019 இல் நரேந்திர மோடியின் பெயரால் வாக்களித்திருந்த வாக்காளர்கள் பின்னர், தாங்கள் மோசமாக ஏமாற்றப்பட்டதாக உணர்கின்றனர். ''மோடி மாயாஜாலத்தின்'' செல்வாக்கு தேய்ந்து வருவதையே இந்த ஏமாற்றமும் சோர்வும் சுட்டிக்காட்டுகின்றன என்பதை ஆட்சியாளர்களும் உணர்ந்து வருகின்றனர். எனவே அவர்கள் 400 தொகுதிகளுக்கும் மேல் வெற்றி பெற்று மிருகப் பெரும்பான்மை பெறுவதை இலக்காக வைத்தனர். ஆவேசப் பரப்புரை இயக்கம் நடத்திட முயற்சித்தனர். ஆனால் அந்த ஆவேசம், கீழ் மட்டத்தில், மக்கள் மத்தியில் எந்த உற்சாகத்தையும் தூண்ட முடியவில்லை என்பதைத்தான் வாக்களித்தோர் எண்ணிக்கையின் வீழ்ச்சி சுட்டிக் காட்டுகிறது. மேலும் பல்வேறு மாநிலங்களிலும் அதிருப்திகளும் பிளவுகளுமே பாஜக முகாமில் காணக் கிடைக்கின்றன. இது பாஜகவின் உயர்மட்ட தலைவர்களிடையே அச்சத்தையும் விரக்தியையும்தான் உருவாக்கியுள்ளது. நரேந்திர மோடி, தானே முன்னின்று நடத்துகிற கண்மூடித்தனமான வெறுப்புப் பரப்புரையில் இந்த விரக்தியின் வெளிப்பாட்டைத்தான் காண முடிகிறது.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் முஸ்லிம் லீக்-கின் முத்திரை பதிக்கப்பட்டுள்ளதாக மோடி அபத்தமாக குற்றம் சாட்டினார். அதன் மூலம், வாக்காளர்களை ஆதரவு - எதிர்ப்பு அணிகளாகப் பிளவுபடுத்தும் (துருவச் சேர்க்கை நிகழ்த்தும்) நோக்குடன் மோடி செய்யும் பரப்புரை அதனை அம்பலப்படுத்தி விட்டது. காங்கிரஸ் தேர்தல் அறிக்கை பொருளாதார நீதி, சமூக நலன், சமூக நீதி குறித்து பேசினால் அதற்கு கம்யூனிஸ்டுகளின் மீது ''பழி'' போடப்படுகிறது. அம்பேத்கரின் தீவிரமான சமத்துவக் கருத்துகள், அவருடைய தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட அரசமைப்பு சட்டம் ஆகியவற்றை இகழ்வது மட்டுமல்ல, ஆரம்பத்தில் இருந்தே, முஸ்லிம்களையும் கம்யூனிஸ்டுகளையும் கூட சங்கிப் படைகள் தமது முதன்மை இலக்காக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே மிகவும் வறுமை நிலவுகிற ஒரு மாவட்டமான ராஜஸ்தானின் பன்ஸ்வாராவில் மோடி ஆற்றிய உரை, பொய் பேசுவதை, வெறுப்பு அரசியலை ஒரு உச்சத்துக்கே கொண்டு சென்று விட்டது. அதோடு ஒப்பிடுகையில், மோடியின் கடந்தகால உரைகள் ஓரளவு மென்மையானவையோ என எண்ணத் தோன்றுகிறது.

இந்தியாவின் வளங்களுக்கான முதல் உரிமையை முஸ்லிம்களுக்கு மன்மோகன் சிங் 2006லேயே வழங்கிவிட்டதாக கூறப்படும் பாஜகவின் கேடுகெட்ட பரப்புரையை மோடி மீண்டும் துவங்கி விட்டார். இது முற்றிலும் பொய் என உண்மையறியும் சோதனைகள் பல அதைத் திரும்பத் திரும்ப அம்பலப்படுத்தி இருக்கின்றன, உண்மையை வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கின்றன. தேசிய வளர்ச்சி கவுன்சிலின் 52 வது கூட்டத்தில், அப்போதைய பிரதம மந்திரி மன்மோகன் சிங், யுபிஏ-1 அரசாங்கத்தின் முன்னுரிமைகளை கோடிட்டுக் காட்டினார். அந்த உரையில், விவசாயம், நீர்ப்பாசனம், உடல்நலம், கல்வி போன்ற துறைகளை வளர்த்தெடுப்பதற்கான நடவடிக்கைகள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட சமூகப் பிரிவினரின் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் பற்றி வலியுறுத்திப் பேசினார். அதைத் திரித்து, முஸ்லிம்களின் நலன் குறித்த பிரச்சனையை, ஒட்டுமொத்த நாட்டு வளர்ச்சி மேம்பாடு எனும் பின்னணியில் இருந்து துண்டித்து பொய் மூட்டையை

அவிழ்த்து விட்டு வருகின்றன சங்கிப் படைகள். சமூகத்தின் பிற பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராக முஸ்லிம்களை நிறுத்த முயற்சிக்கின்றனர். அத்தகைய புளுகுமூட்டையை, நச்சுப் பரப்புரையை புதிய உச்சத்துக்குக் கொண்டு செல்கிறார் மோடி.

இந்து பெண்களின் தாலியும் பறிக்கப்படும் என்ற பொய்யின் மூலம் முஸ்லீம்களுக்கு எதிராக, காங்கிரசுக்கு எதிராக அவர்களை தூண்டி விட முயற்சிக்கிறார் மோடி. ஒருவேளை காங்கிரஸ் ஆட்சிக்கு வந்து விட்டால் சாமான்ய மக்களின் சொத்துக்கள் பிடுங்கப்படும் (மறுபங்கீடு செய்யப்படும்) என்று பயமுறுத்துகிறார். இவையெல்லாம், இன்று வரை எந்த ஒரு தலைவரும் செய்யத் துணியாத அளவுக்கு வெறுப்பை விதைக்கிற செயலன்றி வேறல்ல. முஸ்லிம்களைத் தீயவர்களாக சித்தரிப்பதற்காக, அவர்கள் அதிக பிள்ளை பெறுகிறார்கள், அண்டை நாடுகளிலிருந்து ஊடுருவுகிறார்கள் என்பது போன்ற பழைய பூச்சாண்டி காட்டுகிறார் மோடி. பத்தாண்டுகள் ஆட்சியில் இருக்கும் பிரதம மந்திரியே இதுபோன்று விஷத்தை கக்குவது, இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அரசமைப்புச் சட்ட கட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள தீவிர அச்சுறுத்தலைக் கோடிட்டு காட்டுவதாக இருக்கிறது.

சாதாரண மக்களின் சொத்துக்களுக்கும் வருமானத்திற்கும் மிகப்பெரிய எதிரி மோடி அரசாங்கம்தான் என்பதை கடந்த பத்தாண்டு கால ஆட்சியும் மக்கள் அனுபவமும் சுட்டிக்காட்டுகிறது. பணமதிப்பிழப்பு முதல் முழுமுடக்கம் வரை, முழுமையான தனியார்மயம் முதல் உழைக்கும் மக்களை வறுமையில் தள்ளுவது வரை, மிகப்பெரும் பணக்காரர்கள் தமது செல்வத்தை மேலும் மேலும் குவிப்பதற்கான திட்டங்கள் வரை தாக்குதல் மேல் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது மோடி அரசாங்கம். சாதாரண மக்களின் குறைந்தளவு சேமிப்புகளையும் வருமானங்களையும் கூட அவர்களிடமிருந்து திட்டமிட்ட ரீதியில் அபகரித்து வருகிறது. கருப்புப் பணத்திற்கு எதிரான போராட்டத்தின் வெற்றி என பணமதிப்பிழப்பைச் சொல்லி, அதனால் விளைந்த மக்களின் அவலத்தைக் கண்டு குரூரமாக மகிழ்ந்தார் நரேந்திர மோடி. மோடியைப் பொறுத்தளவில் அனைத்து வளங்களுக்குமான முதல் உரிமை அவரது கார்ப்பரேட் நண்பர்களுக்கு மட்டுமே சொந்தமானது. அதே வேளையில், 80 கோடி இந்தியர்கள் மாதத்திற்கு 5 கிலோ இலவச ரேஷன் பொருளைப் பெற்றுக்கொண்டு



அமைதியாக இருக்க வேண்டுமென பணிக்கப்படுகிறார்கள்.

543 உறுப்பினர்கள் கொண்ட ஒரு அவையில் 400க்கும் கூடுதலான

பெரும்பான்மை பெறும் பீற்றலுடன் துவங்கிய மோடியின் பரப்புரை இயக்கம், தற்போது, காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடும் என மிரட்டுவதாகவும், தனியார் மயம் போன்ற பேரழிவுமிக்க கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளிலிருந்து விலகிப் போய்விடும் என பயமுறுத்துவதாகவும் மாறிப்போய் இருக்கிறது. ஆட்சியாளர்கள் அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. பீதியடைந்த ஆட்சியாளர்கள், தமது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வெறுப்பை, வெறியை தூண்டுவது மட்டுமல்ல, அதையும் தாண்டி, சகலவிதமான சதி நடவடிக்கைகளிலும் இறங்குவதைக் கண்டு ஆச்சரியப்பட ஏதுமில்லை. சண்டிகர் வாக்கு எண்ணிக்கை மோசடியில் கையும் களவுமாக மாட்டிக் கொண்ட பிறகு, ஆட்சியாளர்கள் இனி ஓரளவுக்காவது நியாயமாக நடந்து கொள்வார்கள் என எதிர்பார்த்தவர்களுக்கு, தேர்தலைத் திருடிய சூரத் மாதிரி பெரும் அதிர்ச்சியைத்தான் கொடுத்தது. வென்றவர்களை விலை கொடுத்து வாங்கும் ‘குதிரை பேரம்’ என்பது மாறி, தேர்தலே இல்லாமல் வெற்றி, வேட்பாளர்களையே விலை பேசுவது என்கிற தேர்ச்சி பெற்ற கலையாக ஆகிவிட்டது.

சுட்டெரிக்கும் கோடை வெயிலில் 2024 தேர்தல் நடக்கிறது. இந்நேரத்தில் பாசிஸ்ட்டுகளை ஆட்சியிலிருந்து வெளியேற்ற, ஜனநாயக சக்திகள் அதிக விழிப்புணர்வுடனும் தீர்மானகரமாகவும் பணியாற்றிட வேண்டும். வேலைவாய்ப்பு, சமூக நீதி என்ற மய்ய நிகழ்ச்சி நிரலையொட்டி மக்கள் அணிதிரண்டு வருகிறார்கள். நாட்டின் பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை, அம்பேத்கரின் அரசமைப்புச் சட்டம், பன்மைத்துவம், உள்ளடங்கிய கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமென மக்கள் உறுதி பூண்டிருக்கிறார்கள். இதனால் ஆட்சியாளர்கள் கலங்கிப் போயிருக்கிறார்கள் என்பதை சர்வாதிகாரியின் கண்களில் தெரியும் பீதியே காட்டிக்கொடுத்து விடுகிறது. தன்னுடைய பணியை சரியாக செய்யும் தேர்தல் ஆணையம் மட்டும் இப்போது இருக்குமானால், விஷத்தைக் கக்குகிற வெறுப்புப் பரப்புரைக்காக இந்நேரம் பிரதமர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். ஆனால், தேர்தல் ஆணையம் தவறுகளைக் கண்டும் காணாமல் இருக்கும் போது, மக்கள் நீதிமன்றம்தான் அதற்கு சரியான தண்டனை வழங்க வேண்டும். முதல் கட்டத் தேர்தல் உருவாக்கிய வேகத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நமது பரப்புரையை தீவிரப்படுத்த வேண்டும். உறுதியாக பணியாற்றிட வேண்டும். வெறுப்பு, பொய்கள், பயங்கரம், கொள்ளையின் பேரழிவுமிக்க பத்தாண்டு கால ஆட்சியைத் தோற்கடித்திட வேண்டும்.

“ஹஸ்தே காடுகளிலிருந்து அதானி திட்டங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்”

# கார்ப்பரேட் கொள்ளை, சர்வாதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

**வன உரிமைகள் சட்டம் கடுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். வனநிலங்கள் மற்றும் வளங்களின் மீது வனங்களில் வாழுகிறவர்களுக்கான உரிமைகள் எவ்விதத்திலும் நீர்த்துப் போகப்படவிடக்கூடாது. வனங்களில் இருந்தும் அவர்களது நிலங்களில் இருந்தும் பழங்குடியினர் வெளியேற்றப்படுவது நிறுத்தப்பட வேண்டும். ஹஸ்தே வனங்களிலிருந்து அதானியின் திட்டங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.**

**–இகக(மாலெ) தேர்தல் அறிக்கையிலிருந்து...**

**பக் 12,**

**11 சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பருவநிலை நீதி**

சத்திஸ்கரில் உள்ள ஹஸ்தே காடுகள், 1600 சதுர கிமீட்டர்களில் விரிந்து பரந்திருக்கிறது. 4,25,000 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. இந்த மாநிலத்தில் 32% பழங்குடி மக்கள் உள்ளனர். கோர்பா, சுர்குஜா, சுராஜ்பூர் பிலாஸ்பூர், ஜாங்கீர்-சம்பா உள்ளிட்ட மாவட்டங்களின் வாழ்வும் பொருளாதாரமும் இந்தக் காடுகளைச் சார்ந்தே உள்ளன. ஹஸ்தே காடுகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்யும் மழையால் ஹஸ்தே ஆறு உருவாகி, ஹஸ்தே பாங் அணைக்கட்டு வழியாக 600 கிமீ பயணம் செய்து ஒடிஷாவின் மகாநதியில் கலக்கிறது. 11 லட்சத்து 25ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருபோக பாசன வசதி பெறுகின்றன. பழங்குடி மக்களது 60-70% ஆண்டு வாழ்வாதாரத்தை இந்தக்காடுகளே வழங்குகின்றன. இவர்களுக்கு வசிப்பிடம், வாழ்வாதாரம், மருத்துவம், வழிபாடு, பண்பாடு அனைத்தும் இந்த காடுகள்தான்.

வளமிக்க பன்மை உயிர்ச்சூழல் கொண்ட இந்தப் பகுதியில் பல பத்து லட்சம், சால், ஒக் போன்ற அரிய மரங்கள் உள்ளன. யானைகள் வழித்தடங்களும், வசிப்பிடங்களும் உள்ளன. இந்தியாவிலுள்ள யானைகளின் 10%, (2700 யானைகள்) இந்த காட்டுப்பகுதியில் வசிக்கின்றன. புலிகள், சிறுத்தைப்புலிகள், மான்கள், அரியவகை கரடிகள் வசிப்பிடங்களும் உள்ளன. 406 வகை பறவைகள், பட்டாம்பூச்சிகள் என வளமான பல்லின உயிர்ப்பெருக்கம் கொண்ட பகுதி.

ஆனால், ஹஸ்தே காடுகளுக்கு கீழே 5 பில்லியன் (50 கோடி) டன் நிலக்கரி புதைந்து கிடப்பதுதான் இயற்கையின் விபரீத முரண்பாடு.

மொத்தம் 23 திட்டுகளில் நிலக்கரி உள்ளதை அடையாளம் கண்ட சத்திஸ்கர் அரசு, புதைந்து கிடக்கும் நிலக்கரியை எடுக்க 2010ல் முடிவு செய்தது. ராஜஸ்தான் அரசுக்கு சொந்தமான மின் உற்பத்தி நிறுவனத்துக்கு நிலக்கரியை வெட்டி எடுக்கும் உரிமையை வழங்கியது. இரண்டு மாநிலங்களிலும் பாஜக ஆட்சிகள் இருந்ததால் ஒப்பந்தம் எளிதாக முடிந்தது. ஆனால் ராஜஸ்தான் அரசு நிறுவனம் நிலக்கரி வெட்டும் பணியை அரசு-தனியார் கூட்டு என்ற பெயரில் அதானி நிறுவனத்துக்கு வழங்கியது. மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சிகள் ஏற்பட்ட பின்னரும் அதானிக்கு எவ்வித தடையும் இல்லை. மாநில, ஒன்றிய ஆட்சிகளின் சுயாட்சி அமைப்புகள் காடழித்து நிலக்கரி எடுக்கும் திட்டத்திற்கு தடை விதித்தபோதும் 2012ல் ஹஸ்தே காடுகளில் அதானி நிறுவனம் கால்பதித்தது.

காடுகளில் ராட்சத இயந்திரங்களை இறக்கிய உடனேயே ஏற்பட்ட பழங்குடியினரது எதிர்ப்பை எதிர்கொள்ள அங்குள்ள ஆண்களுக்கு பணம், மதுவைக் கொடுத்து நிலத்தை அபகரித்தது. கல்வி, மருத்துவ நடவடிக்கைகள் என்ற பெயரில் நல்லெண்ணத்தை ஏற்படுத்திக் கொள்ள முனைந்தது. மூன்றாவதாக, மாநில, ஒன்றிய அரசிலுள்ள அனைத்து அடுக்குகளிலும் உள்ளே நுழைந்து, அனைத்து தடைகளையும் ஊதித்தள்ளியது.

முதல்கட்ட நிலக்கரி வெட்டும் நடவடிக்கை, பல ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தியது. இயற்கையான, மண் வீடுகளில் வாழ்ந்த பழங்குடியினர் கிராமங்களிலிருந்து தூக்கியெறியப்பட்டனர். பெண்கள் அருகிலுள்ள சிறு நகரங்களுக்கு வீட்டுவேலைகளுக்குச் செல்லும் அவலம் உருவானது. குடும்பத்தின் பொருளாதாரச் சுமை முழுவதும் பெண்கள் மீது விழுந்தது. காற்றும், ஆறும் மாசுபட்டதால் சுத்தமான குடிநீரை இழந்தனர். நல்ல தண்ணீர் தேடி நீண்டதூரம் சென்றனர். இதன் காரணமாக “ஹஸ்தே காடுகளைப் பாதுகாப்போம்” இயக்கத்தில், பெண்களே முன்னணியில் இருந்தனர். சிப்கோ இயக்கத்தை நினைவு படுத்தும் வகையில் மரங்களைக் கட்டிப்பிடித்து போராட்டம் நடத்தினர். தங்களது நிலம், மூலவளங்கள், வீட்டிற்கான போராட்டத்தை நடத்தி வந்தனர்.

அதானியின் நிலக்கரிக் கொள்ளைக்கு ஒரு பருக்கை உதாரணம். ராஜஸ்தான் மின் உற்பத்தி நிறுவனத்துக்கு ஒரு டன் நிலக்கரி, ரூ. 2175 வீதம் விற்ற அதானி நிறுவனம், சத்திஸ்கரில் நடத்திவரும் தனது மின் உற்பத்தி நிலையங்களுக்காக அதே ராஜஸ்தான் நிறுவனத்திடமிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 450 விலைக்கு வாங்கி பயன்படுத்தியுள்ளது. இவ்வாறு 2.6 மில்லியன் டன் நிலக்கரியை வாங்கி ரூ.450 கோடி லாபமடைந்திருக்கிறது! பருக்கையே இப்படி என்றால் பானைச் சோறு எப்படியிருக்கும்?

‘நிலக்கரி ஊழல்’ நாடுமுழுவதும் எழுப்பிய அதிர்வலைகளைத் தொடர்ந்து, உச்சநீதிமன்றம் நிலக்கரித் திட்டுகள் ஒதுக்கீட்டை ரத்துசெய்தது. இதில், ஹஸ்தே காடுகளுக்கு உட்பட்ட தாரா திட்டும் அடங்கும். 2014ல் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற மோடி, உச்சநீதிமன்றத் தீர்ப்பை



ரத்துசெய்து, நிலக்கரி ஒதுக்கீட்டை தனியாருக்குக் கொடுக்கலாம் என்று சட்டம் கொண்டு வந்தார். அதுமுதல் அதானி காட்டில் அடைமழை! ஹஸ்தே காடுகளை கபளிகரம் செய்ய அனைத்து கதவுகளையும் திறந்து விட்டார். இவ்வாறுதான், திவாலாகும் நிலையிலிருந்த அதானியை, உலகப் பணக்காரர்களுள் ஒருவராக அசுர வளர்ச்சி காண வைத்துவிட்டார் மோடி. அவருக்கு அதானியின் வளர்ச்சிதான் இந்தியாவின் வளர்ச்சி!

பழங்குடி மக்களது போராட்டம் உச்சமடைய, 2022 ஜூலையில் காங்கிரஸ் ஆட்சியின், சட்டப்பேரவை நிலக்கரி ஏலத்தை தடைசெய்து ஒருமனதாக தீர்மானம் கொண்டு வந்தது. பழங்குடி வாக்குகளை குறிவைத்து, 2023ல் தேர்தலில், பழங்குடி மக்களது நிலம், நீர், காடுகள் பாதுகாக்கப்படும் என்று மோடி “உத்தரவாதம்” அளித்தார். தேர்தலில் பாஜக வென்றவுடன், “உத்திரவாதம்” காற்றில் பறந்து விட்டது. மாநிலத்தில் முதல்முதலாக முதல்வராக்கப்பட்ட பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த முதலமைச்சரைக்கொண்டே சட்டப்பேரவை தீர்மானத்துக்கு எதிராக, காடுகளை அழிக்கும் செயலை பாஜக அரசாங்கம் மீண்டும் தொடங்கியது. பழங்குடி மக்களுக்கு துரோகம் செய்தது.

மோடி அரசாங்கம் தனது கார்ப்பரேட் நண்பர் அதானிக்காக அரசமைப்புச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட சட்டங்களை அப்பட்டமாக மீறியுள்ளது. அரசமைப்புச் சட்டம், அட்டவணை 5ன்படி ஹஸ்தே பகுதிக்கென்று சிறப்புச்சட்ட, நிர்வாக ஏற்பாடுகள் உள்ளன. இது பழங்குடி மக்களது நலன்களை, உரிமைகளை பாதுகாக்கும் அரசமைப்புச்சட்ட ஏற்பாடாகும். காடுகள் உரிமைச்சட்டம் 2006, பெசா சட்டம் 1996, நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு, வெளிப்படைத் தன்மை, மறுவாழ்வு, மறுகுடியமர்த்தும் சட்டம் 2013, ஆகிய சட்டங்களை “இரட்டை என்ஜின் அரசுகள்” காலில்போட்டு நசுக்கின.நிலம் கையகப்படுத்தலுக்கு முன் கிராமசபைகள் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்ற இந்த சட்டங்கள் பலவந்தமாக புறக்கணிக்கப்பட்டன. 2015ல் 20 கிராமசபைகள் காடுகளில் நிலக்கரி திட்டம் வேண்டாமென்று ஏகமனதாக தீர்மானங்களை நிறைவேற்றின. இந்த தீர்மானங்கள் ஏற்கப்படவில்லை. மாறாக, அதானி நிறுவன ஏற்பாட்டில் பொய்யான கிராமசபை தீர்மானங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பணம் பாதாளம் வரை பாயும் என்பார்கள். அதானியின் அதிகாரம், ஆகாயம்வரை என்பது உண்மையாகிவிட்டது.

அதானியின் திட்டம் தொடர்ந்தால், ஹஸ்தே காடுகள் அழிந்து சுற்றுச்சூழல் பேரழிவு ஏற்படும். தாவரங்கள், விலங்குகள், பறவைகள் உள்ளிட்ட உயிரினங்கள் அழியும். வறட்சி, பெருவெள்ளம் உண்டாகும். ஹஸ்தே ஆறு வறண்டுபோகும். இதனால், கோடிக்கணக்கான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கும் மகாநதியே கடுமையாக பாதிக்கப்படும். இதனால்தான் பழங்குடி மக்களும் இடது, முற்போக்கு, சுற்றுச்சூழல் இயக்கங்களும் கடந்த 13 ஆண்டுகளாக “ஹஸ்தேவை பாதுகாப்போம்” இயக்கத்தை நடத்தி வருகின்றன.

ராஜஸ்தானிலும் சத்திஸ்கரிலும் தேர்தல் பரப்புரையின் போது பழங்குடி மக்களை பார்த்து பேசிய மோடி, இதைப்பற்றி எதுவும் பேசவில்லை. மாறாக, காங்கிரஸ் நாட்டின் சொத்துக்களை பறித்து “ஊடுருவல்காரர்களிடமும் அதிகம் பிள்ளைப் பெறுபவர்களிடம் (இஸ்லாமியர்களிடம் கொடுத்துவிடுவார்கள்), “நமது சகோதரிகளின் தாலிகளையும் பறித்து இஸ்லாமியருக்கு கொடுத்து விடுவார்கள்” என்று வெறுப்பின் உச்சத்தை உமிழ்ந்திருக்கிறார். ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் பழங்குடி, பூர்வகுடி மக்களின் நிலம், நீர், காடுகள், வாழ்வாதாரம். வழிபாடு. பண்பாடு அனைத்தையும் பிடுங்கி அதானியிடம் ஒப்படைத்தவர் மோடி. செல்லாதபண நடவடிக்கை, கொடூர ஜிஎஸ்டி வரிவிதிப்பு, குடியுரிமை திருத்தச்சட்டம், மூன்று வேளாண் சட்டங்கள், கோவிட் கொடூரம் இவற்றால் கோடானகோடி மக்கள் வாழ்வைப் பறித்துவிட்டார் மோடி. இதை மறைப்பதற்காகத்தான் மோடி, வெறுக்கத்தக்க இஸ்லாமிய ‘வெறுப்பை’ உமிழ்கிறார். இதற்கு பதிலடியாக, “மோடியின் கார்ப்பரேட் நண்பர்களுக்கு வழங்கப்பட்ட 16 லட்சம் கோடியை எடுத்து, ஏழைகளுக்கு கொடுப்போம்’ என்று ராகுல் காந்தி கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல, “ஹஸ்தே காடுகளிலிருந்து அதானி அப்புறப்படுத்தப்பட வேண்டும். பெரும் பணக்காரர்கள் மீது 1% செல்வவரி, வாரிசுரிமை வரி விதிக்கப்படவேண்டும். கார்ப்பரேட் வரிவிகிதம் அதிகரிக்கப்பட வேண்டும். தள்ளுபடி செய்யப்பட்ட கடன்கள், செயல்படாத சொத்துக்கள் மீட்கப்பட வேண்டும். காட்டுநிலங்கள், கடற்கரைப்பகுதிகள், பாரம்பரிய மீன்பிடிப்பு மண்டலங்களில் தனியார்மயமாக்கமும் வர்த்தகமயமாக்கமும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்”. இவை, 2024 தேர்தல் தீர்ப்பாக அமையவேண்டும். கார்ப்பரேட் கொள்ளைக்கும் சர்வாதிகாரத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

**–இளவழகன்**



# கேரளா ஸ்டோரி திரைப்படமும் – லவ் ஜிஹாத் கட்டுக் கதையும், இந்தியாவில் காணாமல் போன ஆயிரக்கணக்கான பெண் சிறுமிகளும்

கடந்த ஏப்ரல் 22, 23 தேதிகளில், கேரள மக்களவை தேர்தல் பரப்புரையிலும், அதற்கடுத்து கர்நாடகாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக் கொண்ட தமிழ்நாடு பாஜக எம்எல்ஏ திருமதி வானதி சீனிவாசன் அவர்கள், ' கேரளாவில் இடதுசாரிகள் ஆட்சியில், கடந்த 4 ஆண்டுகளில் 5338. சிறுமிகள் லவ் ஜிஹாத் சதி வழியாக கடத்தப்பட்டுள்ளனர்' என்ற அவதூறு பரப்புரை மேற்கொண்டார். அவருடைய கேரளப் பிரச்சார நாளில், ஏப்ரல் 22ல், எக்ஸ் தளத்தில் பின்வருமாறு பதிவும் செய்தார். "கடந்த 4 ஆண்டுகளில் கேரளாவில் 5338 சிறுமிகள் காணாமல் போயுள்ளனர். ஆயினும்கூட, இந்த ஆபத்தான புள்ளிவிவரங்களைப் பற்றி பேசுவதற்குப் பதிலாக, திரு பினராயி விஜயன் அவற்றை வெறும் பாஜக பிரச்சாரம் என்று ஒதுக்கித் தள்ளுகிறார்!"

## கேரளா மற்றும் இடது அரசாங்கத்தின் மீதான தாக்குதல்:-

பாஜக கட்சி மற்றும் தலைவர்கள், கேரளாவை ஜிகாதி மாநிலம் என்று நாடு முழுவதும் முத்திரை குத்தும் ஆபத்தான பிரச்சாரத்தின் மூலம் கேரளாவை, இடது அரசாங்கத்தை அவமதித்து வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாகவே இத்தகைய பரப்புரை தேர்தல் பிரச்சார கூட்டங்களிலும், சமூக ஊடகங்களிலும் கட்டமைக்கப்படுகிறது. அதாவது கேரளா தேச விரோத மாநிலம் என சித்தரித்து அதற்கு காரணம் இடது சனநாயக முன்னணி அரசாங்கம் மற்றும் காங்கிரஸ் கட்சியின் முஸ்லீம் லீக் உடனான UDF கூட்டணி என்பதாக கம்யூனிஸ்ட் மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு எதிராகத் தொடர் பிரச்சாரம் கட்டமைக்கப்படுகிறது; கேரளாவை ஜிகாதி நாடாக சித்தரித்து இந்து வாக்குகளை தங்களுக்கு ஆதரவாக அணிதிரட்டும் முயற்சி நடக்கிறது. இந்தியாவின் தேசிய தொலைக்காட்சி சேனலில் 'கேரளா ஸ்டோரி' என்ற மூன்றாம் தர பிரச்சாரத் திரைப்படம் ஒளிபரப்பப்படுகிறது. இந்த கேரளா ஸ்டோரி கதையை தான், '5338 கேரளப் பெண்கள் லவ் ஜிகாத் சதிவழியாக காணாமல் போனதாக' வானதி சீனிவாசன் போன்றவர்கள், பாஜக பேச்சாளர்கள் தூசு தட்டி மீண்டும் முன்வைக்கிறார்கள். இஸ்லாமிய வெறுப்பைப் பரப்புவதன் மூலம் இந்து வாக்குகளை பாஜக பக்கம் துருவப்படுத்த தீவிரமான முயற்சிகள் நடக்கிறது

## தி கேரளா ஸ்டோரி என்ற கட்டுக்கதை திரைப்படம்:-

'தி கேரளா ஸ்டோரி' கடந்த 2023 ம் ஆண்டு மே 5 ந் தேதி வெளியிடப்பட்டது. கேரளாவில் உள்ள இளம் இந்து, கிறித்துவப் பெண்கள் மூளைச் சலவை செய்யப்பட்டு இஸ்லாம் மதத்திற்கு மாற்றப்பட்டு, லவ் ஜிஹாத் வழியாக அவர்கள் தீவிரவாதிகளாகவும் மாற்றப்படுகிறார்கள் !? என்பதுதான் திரைப்படத்தின் கதையாகும்.

பல்வேறு மத, இன அடையாளங்களுடன் ஒற்றுமையாக பெருமைப்படும் வகையில் மக்கள் வாழும் கேரளாவில், தி கேரளா ஸ்டோரி படத்தின் கதை முழுக்கமுழுக்க இஸ்லாமிய வெறுப்பை அடிப்படையாகக் கொண்டது ஆகும்.

"மூன்று பெண்களின் உண்மைக் கதை என இந்தப்படம் குறிப்பிடுகிறது. கதாநாயகி 'கேரளாவில் தங்கள் நர்சிங் கல்லூரி காலத்தில் அறைத்தோழியான ஆசிஃபா, தான் உட்பட மூன்று பேரை இஸ்லாம் மதத்திற்கு மாற்றியதாகவும், அதற்காக போதை

மருந்துகளை பயன்படுத்தியதாகவும், தனது ஆண் நண்பர்கள் ஒத்துழைப்புடன் ஆசிஃபா இதை நிகழ்த்தியதாகவும்' படத்தில் கதை சொல்கிறார். மேலும், படத்தின் கதைப்படி, 32000 கேரள இளம் பெண்கள் இஸ்லாமிய தீவிரவாத ஐஎஸ்ஐஎஸ் அமைப்பில் சேர கடத்தப்படுகின்றனர்.

மேலும், இந்தப் படம் இந்திய முஸ்லீம்கள் எப்படி எல்லாம் 'ஐஎஸ்ஐஎஸ்' அமைப்பில் சேர்ந்தார்கள் என்று பல்வேறு கட்டுக்கதை காட்சிகளையும் கொண்டிருக்கின்றது; கேரளாவின் காசர்கோடு, மலப்புரம் ஆகிய பகுதிகளை தீவிரவாத ஆட்சேர்ப்பு முகாம்களாகவும் சித்தரிக்கிறது. கேரளா அடுத்த 20 ஆண்டுகளில், முஸ்லீம் மாநிலமாக மாறும் என துணை முதலமைச்சரே தெரிவித்ததாகவும் படத்தில் சொல்லப்படுகிறது. 'ஒட்டுமொத்த கேரளாவும் ஒரு வெடிகுண்டின் மீது அமர்ந்திருப்பதாக' படத்தில் சொல்லப்படுகிறது.

இசுலாமியர் வெறுப்பின் உச்சமாக திகழ்கிற இந்தப் படத்திற்கு எதிராக, உடனடியாக உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டது. கடந்த 18.5.23 ல்,

உச்சநீதிமன்றமானது, கேரளா ஸ்டோரி திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு பின்வரும் உத்தரவு பிறப்பித்தது.

"படம் கற்பனையே ! மதம் மாற்றப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 32000 மோ அல்லது வேறு எதுவோ என்பதற்கு உண்மையான தரவு இல்லை!" என்ற பொறுப்புத்துறப்பை படத்தில் வெளியிட வேண்டும் என்றது.

எனினும், உச்சநீதிமன்ற உத்தரவு இப்படி இருந்தபோதிலும், நாடுமுழுவதும் உள்ள பாஜக தலைவர்கள் மற்றும் சங்கிகள் தி கேரளா ஸ்டோரி திரைப்படம் உண்மை சம்பவமாகவும், " கேரளாவில் காணாமல் போனதாக NCRN யில் பதிவான பெண்கள் எல்லாம் கடத்தப்பட்டு 'ஐஎஸ்ஐஎஸ்' அமைப்பில் சேர்க்கப்பட்டார்கள்" என்பதாகவும் தொடர்ந்து அரசியல் செய்தார்கள்; தற்போதைய மக்களவை தேர்தல் பிரச்சாரத்திலும் தொடர்கிறார்கள்.

¶நாடுமுழுவதும், குசராத்தில், கேரளாவில்

காணாமல் போனவர்கள் பற்றி தேசிய குற்ற ஆவணக் காப்பகம் சொல்வது என்ன?

கடந்த பத்தாண்டு மோடி ஆட்சியில், தினந்தோறும் பெண்கள், சிறுமிகள் மீதான அனைத்துவிதமான வன்கொடுமைத் தாக்குதல்களும் நடந்துகொண்டிருக்க, மல்லாந்து படுத்துக்கொண்டு, பாஜக தன்மீது காறி உமிழ்ந்து கொள்கிறது.

நாடு முழுவதும் காணாமல் போனவர்கள் பற்றிய கணக்கு எடுப்பது தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வழியாக 2016 ல் இருந்து தான் துவக்கப்பட்டது. தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (National Crime Records Bureau, சுருக்கமாக: NCRB) என்பது, இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், சிறப்பு மற்றும் உள்ளூர் சட்டங்கள் ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட குற்றப் புள்ளிவிவரங்களை சேகரித்து தொடர்ந்து வெளியிடுகிறது.

### என்சிஆர்பி தரவுகளின்படி, இந்தியாவில்

2016 முதல் 2021 வரையிலான ஆறு ஆண்டுகளில் மொத்தம் 20.36 லட்சம் பேர் காணாமல் போயுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 3.4 லட்சம் பேர் காணாமல் போயுள்ளனர். மேலும், 2016ல் 2.9 லட்சமாக இருந்த காணாமல் போனவர்களின் எண்ணிக்கை, 2021ல் கிட்டத்தட்ட 3.9 லட்சமாக அதிகரித்தது. காணாமல் போனவர்களில் பெண்களே பெரும்பான்மையாக உள்ளனர். 2016 இல் 60% ஆக இருந்த பெண்கள் எண்ணிக்கை

2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் 68% க்கும் அதிகமாக உயர்ந்தது.

பொதுவாக, காணாமல் போனதாக காவல்துறையில் புகார் தரப்பட்டு பதிவு செய்யப்படுகிறது. இவற்றை தொகுத்து தான் புள்ளிவிவரங்கள் உருவாக்கப்படுகின்றன. தங்கள் வாழ்விடத்தில் இருந்து மக்கள் காணாமல் போவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. முதன்மை காரணமாக, காதல், கடன், கல்வி தோல்வி, வாழ்விடத்தில் தாக்குதல்கள் அல்லது சிக்கல்கள் ஆகியவற்றால் சொல்லாமல் கொள்ளாமல் தானாக வெளியேறுதல் / ஓடிவிடுவது என்பது நடைபெறுகிறது. இதுவல்லாமல் விபச்சாரத்திற்காக பெண்கள் கடத்தப்படுவது நடைபெறுகிறது. வெவ்வேறு காரணங்களும் சொல்லப்படுகிறது. காணாமல் போனவர்களில் பாதிக்கும் அதிகமானோர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும்


மாலெ தீப்பொறி சந்தாதாரர் ஆகிடுவீர்!

மாதம் இருமுறை

தனி இதழ் ரூ.10

ஆண்டுச் சந்தா ரூ.200


நன்கொடைகள் தாரீர்

NCRB கூறுகிறது.

**ஆயிரக்கணக்கான சிறுமிகள் மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, குசராத்தில் காணாமல் போனார்கள்:-**

இந்தியாவில் கடந்த 2019 முதல் 2021 ஆம் ஆண்டு வரை மட்டும் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள், 18 வயதுக்கு கீழ் உள்ள 2 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண் சிறுமிகள் காணாமல் போனதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் NCRB தெரிவித்துள்ளது. 2023 ம் ஆண்டில் ஒரு புதிய அறிக்கையும் வெளியிட்டது. இதில் 2021-ல் மட்டும் 18 வயதுக்கும் மேற்பட்ட பெண்களில் 3,75,058 பேர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் காணாமல் போகும் குற்றம் நடைபெறும் மாநிலங்களில் மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம் முதல் இரண்டு இடங்களில் உள்ளன. இந்த இரு மாநிலங்களில் தான் 2019 முதல் 2021 வரை அதிகளவிலான பெண்கள் காணாமல் போயுள்ளனர். மத்தியப் பிரதேசத்தில் 2019-ஆம் ஆண்டு 52,119 பெண்கள், 2020 ஆம் ஆண்டு 52,357 பெண்கள், 2021-ஆம் ஆண்டு 55,704 பெண்கள் காணாமல் போயுள்ளனர். மகாராஷ்டிராவில் 2019-ல் 63,167 பெண்கள், 2020-ல் 58,735 பெண்கள், 2021-ல் 56,498 பெண்கள் காணவில்லை எனப் பதிவாகியுள்ளது.




குசராத்தில் 2016 - 20 ஆண்டுகளில் மட்டும் 41,321 பெண்கள் காணாமல் போனதாக NCRB தேசிய குற்ற ஆவணக் காப்பகம் சொல்கிறது. கடந்த ஆண்டில், ‘கேரளா ஸ்டோரி’ மீதான விவாதத்தை சங்கிகள் கட்டமைத்த காலத்தில், குசராத்தில் காணாமல் போனவர்கள் பிரச்சினை மீது மாபெரும் விவாதம் உருவாக, 41,321 பெண்களில் 1,328 பேர்கள் தவிர மீதி எல்லாம் கண்டுபிடிக்கப் பட்டதாக குசராத் காவல்துறை சொன்னது; ஆனாலும், இதுகுறித்து எந்தத் தரவுகளையும் குசராத் வழங்கவில்லை.

**கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கான சிறுமிகள் இதுவரை மீட்கப்படவில்லை :-**

ஒட்டுமொத்தமாக, 2022 ஆம் ஆண்டில் 62,099 சிறுமிகள் கடத்தப்பட்டதாகவோ அல்லது கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டதாக என்சிஆர்பி புள்ளிவிவரம் கூறுகிறது. இதற்கு முந்தைய கடந்த ஆண்டுகளில் கடத்தல் அல்லது கடத்தலுக்கு ஆளான மீட்கப்படாத சிறுமிகளின் எண்ணிக்கை 40,219 ஆகும். ஆக, 2022ஆம் ஆண்டுக்குள் கடத்தப்பட்ட அல்லது கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட சிறுமிகளின் எண்ணிக்கை 1,02,318 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் ஒரே கட்டுரை தலைப்புகள் வீதம் பிரித்தாலஆண்டில் 63,513 சிறுமிகள் உயிருடன் மீட்கப்பட்டதோடு 590 சிறுமிகள் உயிரிழந்துள்ளனர் என்பதாகவும் NCRB சொல்கிறது. கடத்தப்பட்ட அல்லது கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 38,215 சிறுமிகளை 2022 ம் ஆண்டின் இறுதிக்குள் மீட்க முடியவில்லை.

‘காணாமல் போன கண்டுபிடிக்கப்படாத பெண்கள்’ பட்டியலில் 2023 ஆம் ஆண்டில் மேலும் காணாமல் போன 62,946 சிறுமிகள் இணைந்துள்ளனர். காணாமல் போன சிறுமிகளின் மொத்த எண்ணிக்கை 94,079 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில், 60,281 சிறுமிகள் ஒரே ஆண்டில் மீட்கப்பட்டனர் அல்லது கண்டுபிடிக்கப்பட்டனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 2023 ம் ஆண்டின் இறுதிக்குள் 33,798 சிறுமிகள் கண்டுபிடிக்கப்படவில்லை அல்லது மீட்கப்படவில்லை.

**லவ் ஜிஹாத் தான் காரணமா?**

கேரளா ஸ்டோரி கதை போல, குசராத், மத்திய பிரதேசம், மகாராஷ்டிர என அனைத்து மாநிலங்களிலும் காணாமல் போன பெண்கள் எல்லாம் இஸ்லாமிய தீவிரவாதிகள் ஆகிவிட்டார்களா என்பதை சங்கிப் பரிவாரங்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

பெண்கள் காணாமல் போவது என்பது வெறும் கேரளா ஸ்டோரி அல்ல - இந்தியாவின் ஸ்டோரி ! இந்தியா முழுவதும் காணாமல் போன சிறுமியர் பிரச்சினைக்கு மாநில அரசுகள் தான் காரணமா? பாஜக ஒன்றிய அரசின் பொறுப்பு என்ன? மோடி பதில் சொல்ல வேண்டும் !

**சந்திரமோகன்**

# இகக (மாலெ) கட்சி ஆவணம்

# பொதுத்திட்டம்– ( 4 )

(2023 டிசம்பர் 1–15 இதழின் தொடர்ச்சி)

## புரட்சியின் கட்டம்

இந்திய சமூகம் நான்கு முக்கிய முரண்பாடுகளால் இயக்கப்படுகிறது. ஏகாதிபத்தியத்திற்கும் இந்திய மக்களுக்கும் இடையிலான முரண்பாடு, நிலப்பிரபுத்துவ தளைகள் மற்றும் மிச்சசொச்சங்களுக்கும், பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு, பெருமூலதனத்திற்கும் இந்திய மக்களுக்கும் குறிப்பாக தொழிலாளர் வர்க்கம் மற்றும் விவசாய சமூகத்திற்கும் இடையிலான முரண்பாடு, ஆளும் வர்க்கங்களின் வெவ்வேறு பிரிவினர்களுக்கிடையிலான முரண்பாடு. முதல் மூன்று முரண்பாடுகளும் பகைத்தன்மை கொண்டவை ஆகும். கடைசி முரண்பாடு, பொதுவாக, பகைத்தன்மையற்றது. அது வழக்கமாக பேரம், சமரசங்கள் என்ற ஒரு சிக்கலான இயக்கப் போக்கில் தீர்க்கப்படுகிறது. பகை முரண்பாடுகள் தெளிவாகத் தெரிகிற விதத்தில் மோசமடைவதன்/ துரிதமடைவதன் மத்தியில், ஏகாதிபத்தியம், பெருமூலதனம், நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்கள் தம்மை ஒரு அசல் அச்சாகவும் காட்டிக் கொள்கின்றன. இந்தக் கூட்டின் பிணைச் சுமையின் கீழ் நமது மக்கள் வாடுகின்றனர். ஆக, இந்த அச்சுக்கும் பரந்துபட்ட இந்திய மக்களுக்கும் இடையிலான பகையே, தற்கால இந்திய சமூகத்தின் பிரதான முரண்பாடாக அமைகிறது. இந்த முரண்பாட்டை கிரகித்துக் கொண்டு தீர்ப்பதன் மூலமே நிலவுகிற ஒடுக்குமுறை சமூக அமைப்பு தூக்கி எறியப்பட முடியும்.

இந்த முதன்மையான முரண்பாடுகள் நமது புரட்சியின் கட்டத்தைத் தீர்மானிக்கின்றன. அது, விவசாயப் புரட்சியை அச்சாணியாகக் கொண்ட மக்கள் ஜனநாயகப் புரட்சியின் கட்டம். ஜனநாயகப் புரட்சியின் முதன்மையான நோக்கம், எல்லா நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களையும் துடைத்தெறிவது, ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டுவது, திறன்வாய்ந்த வரிவிதிப்பு, தேசியமயமாக்கம் மற்றும் இதர வழிகள் மூலம் பெருமூலதனத்தைக் கட்டுப்படுத்துவது வரம்புக்குட்படுத்துவது, மொத்த ஆட்சிமுறை கருவியை, பொறியமைவை ஜனநாயகப்படுத்துவது என்பதாக இருக்கும். ஆகவே வெற்றிகரமான ஜனநாயகப் புரட்சி, சோசலிசம் நோக்கிய ஒரு துணிச்சலான அடிவைப்பைக் குறிக்கும். குறுக்கீடுகள் அற்ற சோசலிச மாற்றத்திற்கான பொருளாயத அடித்தளத்தை வலுப்படுத்தும்.

## தொழிலாளர் வர்க்கத் தலைமை

இந்திய மக்களின், மிகவும் தொடர்ச்சியான புரட்சிகரமானதும், மிகவும் கட்டமைக்கப்பட்டதும், மிகவும் முன்னேறிய பகுதியுமான தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில்தான், ஒரு மக்கள் ஜனநாயகப் புரட்சியை, இந்தியாவில் நிறைவேற்ற முடியும்.

ஜனநாயகப் புரட்சியை வெற்றியை நோக்கி வழிநடத்த, பாட்டாளி வர்க்கம் ஓர் ஒன்றுபட்ட சுதந்திரமான அரசியல் சக்தியாக எழுவதும் பொதுவான ஜனநாயக இயக்கத்தின் மீது தன் மேலாண்மையை வளர்த்தெடுப்பதும் அவசியம். இந்த நோக்கத்தோடு பாட்டாளி வர்க்கம்,

அ. கிராமப்புரங்களில் உள்ள தனது மிகப்பெரிய படைப்பிரிவிற்கு, நகர்ப்புரங்களில் சிதறடிக்கப்பட்டுள்ள மிகப்பரந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்துவதன் மூலம் அவற்றுடன், தன்னை அய்க்கியப்படுத்திக் கொண்டு, உழைக்கும் மக்கள் சந்திக்கிற வாழ்நிலைமைகள், வேலை நிலைமைகளை மேம்படுத்த போராட வேண்டும். சர்வதேச மூலதனமும் இந்தியப் பெருமுதலாளித்துவமும் திரும்பத் திரும்ப ஏற்படும் தங்கள் நெருக்கடிகளின் சுமையை இந்திய மக்களின் தோள்களில் ஏற்றும் முயற்சிகளை எதிர்க்க வேண்டும்.

ஆ. புரட்சிகர விவசாய போராட்டங்களைக் கட்டமைக்க வேண்டும். ஆதரிக்க வேண்டும். கிராமப்புரங்களில் அதன் வலுவான கோட்டைகளை நிறுவ வேண்டும்.

இ. இந்திய வெகுமக்களின் அனைத்து வகை ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களைக் கட்டமைக்க வேண்டும்; ஆதரிக்க வேண்டும்.

ஈ. பெண் விடுதலை இயக்கத்தை கட்டமைக்க வேண்டும், ஆதரிக்க வேண்டும், ஒன்றுபட வேண்டும்.

உ. தலித்துகள், பிற ஒடுக்கப்பட்ட பிரிவினர் மீதான எல்லாவிதமான ஒடுக்குமுறைகளையும் ஒழிப்பதற்கான, அவர்களுக்கு எதிரான பாகுபாடுகள், தப்பெண்ணங்களுக்கு எதிரான, சாதி முறையையே அழித்தொழிப்பதற்கான போராட்டங்களை, கட்டமைக்க வேண்டும். ஆதரிக்க வேண்டும்; ஒன்றுபட வேண்டும்.

ஊ. ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான, மதச்சிறுபான்மையினரின் மத கலாச்சார சுதந்திரத்திற்கான, பழங்குடியினரின் பூர்வகுடியினரின் கவுரவம், சமத்துவம், நீதிக்கான போராட்டங்களை, கட்டமைக்க வேண்டும். ஆதரிக்க வேண்டும்; ஒன்றுபட வேண்டும்.

எ. அறிவாளிப் பிரிவினரின் முற்போக்கு, ஜனநாயக விருப்பங்களை, முன்முயற்சிகளை ஆதரிக்க வேண்டும். முன்னேற்ற வேண்டும்.

ஏ. பெரும் தொழில் குழும ஆதிக்கத்தில் உள்ள பிற்போக்கு ஊடகத்திற்குப் பதிலாக ஒரு ஜனநாயக ஊடக வலைப்பின்னலை வளர்த்தெடுக்கிற, தப்பித்தல் தன்மை வாய்ந்த கேளிக்கை என்ற மேலோங்கிய பிரதான நீரோட்டத்திற்கு சவால்விட, மக்கள் கலாச்சாரத்தின் தொடுவான எல்லைகளை விரிவுபடுத்துகிற ஒவ்வொரு முயற்சியையும் ஆதரிக்க வேண்டும்.

அய். தெற்கு ஆசியாவின் எந்தப் பகுதியிலும் நடைபெறும் முற்போக்கான மக்கள் போராட்டங்களை ஆதரிக்க வேண்டும்; அவற்றோடு ஒருமைப்பாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும்.

ஒ. தமது உரிமைகள், கவுரவத்திற்கான, நிறவெறி மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான, இந்திய வம்சாவழியினர் இதர தெற்காசிய வழிவந்த மக்களின் முற்போக்கு போராட்டங்களோடும் முன்முயற்சிகளோடும் ஒன்றுபட வேண்டும்; அவற்றை ஆதரிக்க வேண்டும்.

ஓ. சர்வதேச தொழிலாளர் வர்க்க இயக்கத்துடன் ஒன்றுபட வேண்டும். ஏகாதிபத்தியம், பிற்போக்கிற்கு எதிரான, சுதந்திரம், ஜனநாயகம், சோசலிசத்திற்கான உலக மக்கள் போராட்டங்களை ஆதரிக்க வேண்டும்.

தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல்ரீதியான தாக்கும் சக்தியை கூர்மைப்படுத்த, உறுதிப்படுத்த, பெருமூலதனம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் தாக்குதலை எதிர்த்திட, அனைத்து இடதுசாரி சக்திகள் மத்தியிலும் செயலில் ஒற்றுமையை வளர்த்தெடுக்க கட்சி சிறப்பு அழுத்தம் வைக்கிறது. அனைத்து இடதுசாரி ஜனநாயக சக்திகளின் பரந்துபட்ட அய்க்கியத்தை கட்டி எழுப்ப அனைத்து முன்முயற்சிகளும் எடுக்கும் அதே நேரம், கம்யூனிஸ்ட் இயக்கத்தில் வால் பிடிக்கும் சமூக-ஜனநாயகவாத போக்கு, இடது சாகசவாத அரை அராஜக போக்குகள் ஆகியவற்றுக்கு எதிரான ஒரு சளைக்காத போராட்டத்தின் மூலம் ஒரே கட்சிப் பதாகையின் கீழ் அனைத்து இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளையும் ஒன்றிணைக்கும் வரலாற்று லட்சியத்துக்கு கட்சி கடப்பாடு கொண்டுள்ளது.

### மக்கள் ஜனநாயக முன்னணி

இந்திய மக்கள் மீண்டும் மீண்டும் ஆளும் வர்க்கங்களின் ஈவிரக்கமற்ற சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டத்தில் எழுந்துள்ளனர். அவர்களின் இந்த விழிப்புணர்ச்சி பல வடிவங்களில் வெளிப்பட்டுள்ளது. மக்கள் பல நேரங்களில், பலதரப்பட்ட கட்சிகளாலும், கட்சிசாரா சக்திகளாலும் கூட வழிநடத்தப்பட்டுள்ளனர். சில சமயங்களில், ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த எதிர்க்கட்சிகளாலும் கூட வழி நடத்தப்பட்டுள்ளனர். மக்களுடைய அத்தகைய இயக்கங்களை ஆதரிப்பதோடு மட்டுமின்றி, அத்தகைய இயக்கங்களை மக்கள் ஜனநாயகப் புரட்சி என்ற இலக்கை நோக்கி திசைவழிப்படுத்த எப்போதும் கட்சி பாடுபட்டு வருகிறது.

தொழிலாளர் வர்க்கத்தால் வழிநடத்தப்படும் மக்கள் ஜனநாயகப் புரட்சியில், பிரதான சக்தியாக இருப்பது விவசாய சமூகமாகும். கட்சி, கிராமப்புர பாட்டாளிகளையும், வறிய விவசாயிகளையும், முழுமையாக சார்ந்து நிற்கிறது. மத்தியதர விவசாயிகள், இதர மத்தியதரப் பிரிவுகளுடன் உறுதியாக அய்க்கியப்படுகிறது. பணக்கார விவசாயிகளில் ஒரு பிரிவினரை தன் பக்கம் வென்றெடுக்க முயல்கிறது. அதே சமயம், மீதமுள்ளவர்களை நடுநிலைப்படுத்துவதன் மூலம் பெரும்பான்மை, புரட்சியின் எதிரிகளோடு சேராமல் தடுக்கப்பட முடியும். அரசின் பேரழிவுகரமான ஏகாதிபத்திய ஆதரவு கார்ப்பரேட்மயமாக்க செயல்திட்டத்தை எதிர்க்கிற வரை, பணக்கார விவசாயிகளின் -அவர்களிலும் குறிப்பாக நெருக்கடியால் சூழப்பட்டுள்ள பசுமைப் புரட்சி பகுதிகளைச் சார்ந்தவர்கள்– போராட்டத்தில் கட்சி ஊக்கமாகப் பங்கேற்கும். அந்தப் பரந்த இயக்கத்தில் ஏழை, நிலமற்ற, தலித், பெண் விவசாயிகளது குறிப்பான கோரிக்கைகளை வலியுறுத்த கட்சி பாடுபடும். கட்சியின் நகர்ப்புர அடித்தளத்தில் பிரதானப் பகுதியாக நகர்ப்புர வறியவர்களும் உழைக்கும் மக்களும் விளங்குவர். இன்னும் கூட, நடுத்தர வர்க்கங்களின் சில பிரிவினர் கட்சியின் முக்கிய கூட்டாளியாக விளங்குவர். சிறு வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் மற்ற சிறிய, நடுத்தர முதலாளிகள் மற்றும் முதலாளித்துவ அறிவாளிப்பிரிவினர் வழக்கமாக, ஊசலாட்டம் கொண்ட உறுதியற்ற கூட்டாளிகளாக இருப்பர்.

ஜனநாயகப் புரட்சியை அதன் இறுதி வரை கொண்டு செல்வதற்கு, தொழிலாளர், விவசாயி கூட்டை அடிப்படையாகக் கொண்டு, தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையின்கீழ், இந்த எல்லா வர்க்கங்களையும் உள்ளடக்கிய ஒரு மக்கள் ஜனநாயக முன்னணி உருவாக்கப்படுவது அவசியமாகும். இந்த நோக்கத்திற்காக கட்சி, பலவகைப்பட்ட வர்க்க/பிரிவு அமைப்புகளோடும், பல வர்க்க அய்க்கிய முன்னணி அமைப்புகளோடும் ஒத்துழைத்து வேலை செய்கிறது; அவற்றுக்குள் வேலை செய்கிறது; அவற்றை வளர்த்தெடுக்கிறது. எந்தவொரு குறிப்பிட்ட அரசியல் சூழலின் தேவைகளுக்கேற்பவும், கட்சி, பிரச்சனை அடிப்படையிலான கூட்டு நடவடிக்கைகளில் ஒரு முழுவரிசை, போராடுகிற ஜனநாயக சக்திகளோடு கரம் கோர்க்கத் தயாராக உள்ளது. குறுகிய காலத்திற்கே ஆனதாயினும் பொருத்தமான பொதுத் திட்டங்களின் அடிப்படையில் கூட்டணிகளில் நுழையவும் தயாராக உள்ளது.

**–தொடரும்**

# பீகார்: மகா கூட்டணி ஊழியர்கள் ஒன்றுபட்ட உழைப்பு, உழைக்கும் மக்கள் உற்சாக வரவேற்பு!

**பீகார்:** மகா கூட்டணி ஊழியர்கள் ஒன்றுபட்ட உழைப்பு, உழைக்கும் மக்கள் உற்சாக வரவேற்பு!

40 மக்களவைத் தொகுதிகள் உள்ள பீகாரில் கடந்த 2019-ல் மொத்த வாக்காளர்கள் 7,12,16,290 பேர். வாக்களித்தவர்கள் 3,99,89,711. ( 57.33 % ). பாஜக 24 சதவீத வாக்குகளுடன் 17 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பாஜக கூட்டணியில் இருந்த ஐக்கிய ஜனதா தளம் 22.26 சதவீத வாக்குகளுடன் 16 தொகுதிகளிலும், லோக் ஜனசக்தி கட்சி 8 சதவீத வாக்குகளுடன் 6 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. காங்கிரசுடன் கூட்டணி அமைத்த ராஷ்ட்ரிய ஜனதா தளம் 15.68 சதவீத வாக்குகளைப் பெற்றபோதிலும் ஒரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. 7.85 சதவீத வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் ஒரு தொகுதியில் வெற்றி பெற்றது.

243 தொகுதிகள் கொண்ட சட்டப்பேரவைக்கு 2020 தேர்தலில் பதிவான வாக்கு சதவீதம் 56.93%. பாஜகவும், ஐக்கிய ஜனதா தளமும் கூட்டணி அமைத்தன. ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் மகாகட்பந்தன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. 110 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக 19.46 % வாக்குகளுடன் 74 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஐக்கிய ஜனதா தளம் 115 தொகுதிகளில் போட்டியிட்டு 15.39 % வாக்குகளுடன் 43 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இவ்விரு கட்சிகளும் இணைந்து கூட்டணி அரசை அமைத்தன. நிதிஷ் குமார் முதல்வரானார்.

காங்கிரஸ் கட்சி 70 தொகுதிகளில் போட்டியிட்டு 9.48% வாக்குகளுடன் 19 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அதன் கூட்டணி கட்சியான ராஷ்ட்ரிய ஜனதா தளம் 144 தொகுதிகளில் போட்டியிட்டு 23.11 % வாக்குகளுடன் 75 தொகுதிகளில் வெற்றி பெற்றது. நமது கட்சிக்கு, மத்திய பீகார், மகத் பகுதி மற்றும் வடக்கு பீகாரின் சில பகுதிகளில் இருந்த உறுதியான மக்கள்-ஊழியர் அடித்தளம், இத் தேர்தலில் ஆர்ஜேடி - ராஷ்ட்ரிய ஜனதா தளம் 75 தொகுதிகளில் வெற்றிபெற்று ஒரு தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்ததற்கு முக்கியமான காரணம் ஆகும்.

19 தொகுதிகளில் போட்டியிட்ட சிபிஐஎம்எல் கட்சி, 3.16% வாக்குகளுடன் 12 இடங்களில் வெற்றி பெற்றது. சிபிஐ 6 தொகுதிகளில் போட்டியிட்டு 2 இடங்களில், சிபிஎம் 4 தொகுதிகளில் போட்டியிட்டு 2 இடங்களில் வெற்றி பெற்றன.

2024 மக்களவை தேர்தலில், பாஜக தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியும், ராஷ்ட்ரிய ஜனதா தளம் சார்பில் மகாகத்பந்தன் கூட்டணியும் பிரதான அணிகளாக உள்ளன. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக 17 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதா தளம் 16 தொகுதிகளிலும், சிராக் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சி 5 தொகுதிகளிலும், ஜித்தன்ராம் மாஞ்சியின் இந்துஸ்தானி அவாமி மோர்ச்சா (செக்யூலர்) கட்சி ஒரு தொகுதியிலும், உபேந்திர குஷ்வாஹா தலைமையிலான ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைமையிலான மகாகட்பந்தன் அணியில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சி 26 தொகுதிகளிலும், ( அதில், விகாஷ்-ஷீல் இன்சான் கட்சிக்கு மூன்று இடங்களை வழங்கியுள்ளது.)

காங்கிரஸ் கட்சி 9 தொகுதிகளிலும், கம்யூனிஸ்ட் கட்சிகள் 5 தொகுதிகளிலும்(சிபிஐஎம்எல்-3, சிபிஐ-1, சிபிஎம்-1) போட்டியிடுகின்றன. சிபிஐஎம்எல் அர்ரா, காராக்கட், நலந்தா ஆகிய 3 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

### அர்ரா மக்களவைத் தொகுதி

போஜ்பூர் மாவட்டத்தின் ஒரு பகுதியான அர்ரா மக்களவைத் தொகுதியில் சந்தேஷ், பர்ஹாரா, அர்ரா, அகியோன் (SC),தராரி, ஜகதீஷ்பூர், ஷாஹ்பூர் என ஏழு சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. வரலாற்று ரீதியாக இந்த தொகுதிக்கு உட்பட்ட பகுதிகள் தலித் மற்றும் விளிம்பு நிலை சாதிகளைச் சார்ந்த கிராமப்புற ஏழைகளுக்கும், உயர்சாதி நிலவுடமையாளர்களுக்கும் இடையே தீவிரமான வர்க்கப்போராட்டங்கள் நடைபெற்ற கிராமங்களாகும். அனைத்திந்திய விவசாய கிராமப்புர தொழிலாளர் சங்கத்தின் முதல் அகில இந்திய மாநாடு இங்குதான் மிக எழுச்சியுடன் நடத்தப்பட்டது. நம்முடைய புரட்சிகர பாரம்பரியம் மிக்க போராட்டங்களின் பின்னணியில் தான், 1989 - 91ல், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தோழர். ராமேஷ்வர் பிரசாத் இந்திய மக்கள் முன்னணி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குப் பிறகு, தொடர்ச்சியாக ஆர்ஜேடி, ஜேடியூ, பாஜக கட்சிகளை சேர்ந்தவர்களே எம்பிக்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2019 தேர்தலில், பிஜேபி கட்சியின் ஆர்கே.சிங் 5,60,106 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். சிபிஐஎம்எல் கட்சியின் வேட்பாளர் ராஜு யாதவ் கிட்டத்தட்ட 4,20,000 வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தை பெற்றார். 2020 இறுதியில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில், இந்த மக்களவைத் தொகுதியில், 3 தொகுதிகளில் ஆர்ஜேடி யும், 2 தொகுதிகளில் (அகியோன், தாராரி) சிபிஐஎம்எல் கட்சியும், 2 தொகுதிகளில் பிஜேபி யும் வென்றன.

இந்த தேர்தலில் அர்ரா மக்களவைத் தொகுதியில், சிபிஎம்எல் பாஜக இடையேதான் முக்கிய போட்டி நிலவுகிறது.

**காராக்கட்:**

கராக்கட் மக்களவைத் தொகுதி, நோகா, தெஹ்ரி, கராக்கட், கோஹ், ஒப்ரா, நபிநகர் ஆகிய 6 சட்டமன்றப் தொகுதிகளைக் கொண்டுள்ளது. மூன்று சட்டமன்ற தொகுதிகள் ரோத்தாஸ் மாவட்டத்திலும், மூன்று அவுரங்காபாத் மாவட்டத்திலும் உள்ளன. இது விவசாயப் போராட்டப் பாரம்பரியத்தையும், சமூக ரீதியாக குஷ்வாஹா, யாதவா, ராஜ்புத் சமூகங்களின் செல்வாக்கையும் கொண்ட பகுதியாகும்.

2019 தேர்தலில், ஐக்கிய ஜனதா தளம் (ஜேடியூ) கிட்டத்தட்ட 4 லட்சம் வாக்குகள் பெற்று இத்தொகுதியை வென்றது. ஆர்ஜேடி ஆதரவுடன் போட்டியிட்ட ராஷ்டிரிய லோக் சமதா கட்சி 3.14 லட்சம் வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்தது. நாம் தனித்துப் போட்டியிட்டு கிட்டத்தட்ட 25,000 வாக்குகள் பெற்றோம். கடந்த 2020 சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் நேர்மாறாக அமைந்தன. மகாகட்பந்தன் வலுவானதாக உருவானது. ஆர்.ஜே.டி 5 எம்.எல்.ஏக்களை பெற்றது; சிபிஐஎம்எல் கராக்கட் தொகுதியை ( எம்எல்ஏ அருண் குஷ்வாஹா) கைப்பற்றியது.

பின்னர் 2021 இல் ராஷ்டிரிய லோக் சமதா கட்சி (RLSP) ஜேடியூ உடன் இணைந்தது. ஆனால், அதுவும் நீடிக்கவில்லை. RLSP கட்சி ஜேடியூவில் பிளவை ஏற்படுத்தி 2023 ஜனவரியில் ஆர்எல்எம் ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா என்ற கட்சியை உருவாக்கியது. இப்போது NDA ஆதரவுடன் ஆர்எல்எம் மீண்டும் போட்டியிடுகிறது.

காராக்கட் மக்களவைத் தொகுதியில், பிரதானப் போட்டி சிபிஐஎம்எல் - ஆர்எல்எம் கட்சிகளுக்கு இடையே உள்ளது.

**நலந்தா:**

அஸ்தவான், பிஹார்ஷரிப், ராஜ்கிர், இஸ்லாம்பூர், ஹில்சா, நலந்தா, ஹர்நாட் ஆகிய 7 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்ட பகுதியாகும். கம்யூனிஸ்ட் மற்றும் சோசலிச நீரோட்ட கட்சிகளின் செல்வாக்கு நிலவிய பகுதியாகும். '80 களில் ஒருமுறை, '90 களில் ஒருமுறை என சிபிஐ கட்சி, இத்தொகுதியில் மக்களவை உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. 2019 மக்களவைத் தொகுதி தேர்தலில், ஜேடியூ 50% ற்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றது. கடந்த 2014 மக்களவைத் தேர்தலில், நாம் ஒருமுறை தனித்து போட்டியிட்டு சுமார் 20,000 வாக்குகள் பெற்றோம். தற்போது, ஜேடியூ, சிபிஐஎம்எல் இடையே பிரதான போட்டி நிலவுகிறது.

### பீகாரில் தேர்தல் பிரச்சாரம் துவங்கியது

நாம் போட்டியிடும் மூன்று தொகுதிகளிலும், தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதம் உள்ளது. இப்போது முதலே, நோட்டீஸ், மூன்று நட்சத்திர கொடி தேர்தல் சின்னம் கொண்ட கொடிகளுடன் நமது தோழர்கள், வேட்பாளர்களுடன் வீடு வீடாக சென்று பிரச்சாரம் செய்து வருகின்றனர். “இந்தியா” கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒன்றிணைந்து, ஆங்காங்கே சட்டமன்ற தொகுதி அளவிலான செயல்வீரர் மாநாடுகளை கட்டமைக்கின்றன. இந்த மாநாடுகளில் மகாகட்பந்தன் கட்சிகளைச் சேர்ந்த ஏராளமான செயற்பாட்டாளர்கள் கலந்து கொள்கின்றனர். தேர்தல் பிரச்சாரத்தின் பல்வேறு கடமைகளை அமல்படுத்துவதில் பொறுப்பேற்றுள்ளனர். கட்சியின் பொதுச் செயலாளர் திபங்கர், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் குணால், திரேந்திர ஜா, அமர் மற்றும் பிறர் இந்த



மாநாடுகளில் பங்கேற்றனர். ஜேஎன்யூ, தில்லி உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழக மாணவர்களின் அணிவரிசையும் இந்த தொகுதிகளில் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

### அகியோன் இடைத்தேர்தல்:

தோழர்.மனோஜ் மன்ஜில், பொய்வழக்கில் அநீதியாக தண்டிக்கப்பட்டு 22 பேர்களுடன் சிறைப்படுத்தப்பட்டுள்ளார். இதனால் ஏற்பட்ட பதவி இழப்பால் காலியான அகியோன் சட்டமன்றத் தொகுதிக்கான மகாகட்பந்தன் வேட்பாளராக தோழர் சிவபிரகாஷ் ரஞ்சன் போட்டியிடும் அகியோன் இடைத்தேர்தல் பிரச்சாரமும் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

### அர்ரா

நூற்றுக்கணக்கான தொண்டர்கள், கட்சி ஆதரவாளர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த தொகுதியின் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் கிராமங்கள், நகர்ப்புறங்களிலும் ஆர்வத்துடன் பணியாற்றி வருகின்றனர். சிபிஅய்எம்எல், ஆர்ஜேடி கூட்டணி கட்சிகளால் சட்டமன்ற தொகுதி வாரியாக செயல்வீரர் மாநாடுகள் நடைபெற்று வருகின்றன. வாக்குச்சாவடி அளவிலான தேர்தல் குழுக்கள் துண்டு பிரசுரங்களை விநியோகிப்பதில் மும்முரமாக உள்ளனர். மே 10 ஆம் தேதி தோழர். சுதாமா பிரசாத் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார். இதில் தேஜஸ்வி யாதவ் மற்றும் மகாகட்பந்தனின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

### காராக்கட்

"சிபிஅய்எம்எல் வேட்பாளர்கள் வெற்றி, தொழிலாளர், விவசாயிகளின் வெற்றி"

இந்தியா கூட்டணிக் கட்சிகளின் சட்டமன்ற தொகுதி அளவிலான செயல்வீரர்கள் மாநாடு ஏப்ரல் 30 அன்று உள்ள கோஹ் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்றது. இதில், தோழர் திபங்கர், கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றினார். "73 வயதில் மூன்றாவது முறையாக பிரதமராக விரும்பும் மோடி, 22 வயதிலேயே இளைஞர்களை ராணுவத்திலிருந்து ஓய்வுபெறச் சொல்வது பெருங்கொடுமை எனச்சாடிய திபங்கர், "தென் இந்தியாவில் பாஜக முற்றிலுமாக துடைத்தெறியப்படும் என்றும், வடமாநிலங்களில் தற்போதுள்ள பாஜக பலம் பாதியாக குறைந்துவிடும் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன" என்றார். "ஆனால் நாம் திருப்தியடைந்து விடக்கூடாது, இந்தியா முழுவதும் பாஜகவை முற்றிலுமாக வீழ்த்துவதற்கு கடுமையாகவும் இடைவிடாமலும் உழைக்க வேண்டும்." என்றார். மேலும், அவர் பேசுகையில், "எங்கள் வேட்பாளர்கள் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள், இது விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், பெண்கள், ஆதிவாசிகள் மற்றும் ஒட்டுமொத்த நாட்டின் அனைத்து ஒடுக்கப்பட்ட பிரிவினரது வெற்றியாக இருக்கும்." எனக் கூறினார். மே 1 ஆம் தேதி தெஹ்ரி சட்டமன்றப் பகுதியில் மகாகட்பந்தன் ஊழியர் மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

### நலந்தா

தொகுதி மக்களுக்கு எதுவும் செய்யாத ஜேடியூ எம்பி மீது கடும் அதிருப்தி அடைந்துள்ள, மாற்றத்தையும் நீதியையும் எதிர்பார்க்கும் தொகுதி மக்களிடமிருந்து, வேட்பாளர் தோழர் சந்தீப் சவுரவின் பிரச்சாரம் உற்சாகமிக்க ஆதரவைப் பெற்று வருகிறது. வீடுவீடாகச் சென்று ஆதரவுகோரும் பிரச்சாரம், ஏராளமான இளைஞர்களையும், மாணவர்களையும்,விவசாயிகள் கிராமப்புற தொழிலாளர்களையும் ஈர்த்துள்ளது. ஏப்ரல் 23 அன்று பீகார் ஷெரீப்பில் திறக்கப்பட்ட தேர்தல் அலுவலக நிகழ்ச்சியில், கூட்டணியின் தலைவர்கள், ஏராளமான கட்சித் "தொண்டர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவருடன் ஆர்ஜேடி செய்தி தொடர்பாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான சக்திசிங் யாதவ் ஹில்சா சட்டசபை தொகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

சந்தீப் சவுரவ், பீகார் சட்டமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எடுத்த முயற்சிகள் நலந்தா மக்களால் பாராட்டப்படுகின்றன; சட்டமன்றத்தில் அவர் ஆற்றிய உரைகளின் வீடியோக்கள் சாமானிய மக்களிடையே ஆர்வத்துடன் விவாதிக்கப்படுவதிலிருந்து தெரிகிறது. எல்லா இடங்களிலும் இருப்பது போலவே, இங்கும் இளைஞர்களுக்கு கல்வி, வேலையின்மை பிரச்சினைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளது

### ஜார்க்கண்ட்:

பீகார் மாநிலத்திலிருந்து 2000ல் பிரிக்கப்பட்ட ஜார்கண்ட் மாநிலத்தின் வனங்கள், கனிம வளங்கள் - குறிப்பாக இரும்பு, நிலக்கரி, அலுமினிய கனிமச் சுரங்கங்கள் கார்ப்பரேட் பெருமுதலாளிகளின் சுரண்டல் இலக்குகளாகத் திகழ்கிறது. மாநில மொத்த மக்கள் தொகையில் பட்டியல் பழங்குடி மக்கள் 28%, பட்டியல் சமூக மக்கள் 12%. பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற வேறுபட்ட சமூகங்கள் வசிக்கும் வளமான கலாச்சார பாரம்பரியத்தையும், வரலாற்று ரீதியாக பழங்குடியினர் போராட்ட மரபையும், புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின் செல்வாக்கையும் கொண்டது. ஜார்கண்ட் மாநில, மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை 14. ( எஸ்டி 5 ,எஸ்சி 1). பாஜக கட்சி 11 எம்பி களை கொண்டுள்ளது.

மறுவாழ்வு தரப்படாமல் வரைமுறையற்ற வகையில் பழங்குடியினர் நிலம் கைப்பற்றப்படுவதற்கு எதிராக கார்ப்பரேட் பெருமுதலாளிகள் மற்றும் அரசாங்கத்துடன் போராடி வரும் பழங்குடியின மக்களின் பாதுகாவலனாக நமது கட்சி திகழ்கிறது; பழங்குடியின மக்கள் உரிமைகள் காக்க உள்ளூர் நிலக்கரி மாஃபியாக்களுடனும் மோதல்களையும்

சந்தித்து வருகிறது. ராஞ்சி, தன்பாத், கிரிதி, கோடெர்மா, ஜம்தாடா மற்றும் பிற பகுதிகளிலும் கட்சி வலுவாக செயல்பட்டு வருகிறது.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா என்ற பழங்குடியினர் கட்சி தலைமையில், மகா கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சிக்கு 29 எம்எல்ஏக்களும், காங்கிரஸ் கட்சிக்கு 17 எம்எல்ஏக்களும், ஆர்ஜேடி மற்றும் சிபிஐஎம்எல் கட்சிகளுக்கு தலா ஒரு எம்எல்ஏ என மொத்தம் 48 பேர் உள்ளனர்.

பாஜக தலைமை தாங்கும் எதிர்க்கட்சி கூட்டணியில் 30 எம்எல்ஏக்கள் மட்டுமே உள்ளனர், இதில் பாஜகவுக்கு 26 உறுப்பினர்கள், அனைத்து ஜார்க்கண்ட் மாணவர் சங்கத்தைச் சேர்ந்த 3 பேர் மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் அஜித் பவாரின் பிரிவைச் சேர்ந்த ஒருவர்.

எனினும், ஜேஎம்எம் ஆட்சியை கவிழ்க்க ஒன்றிய மோடி அரசாங்கம் தொடர்ந்து சதி செய்து வருகிறது. ஜார்க்கண்ட் முதல்வராக இருந்த ஹேமந்த் சோரனை நில மோசடி வழக்கில் அமலாக்கத் துறை கைது செய்யவே, அவர் பதவி விலகினார். 2024 பிப்ரவரியில், புதிய முதல்வர் சம்பாய் சோரன் தனது பெரும்பான்மையை நிரூபித்தார். ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா ஆட்சியை கவிழ்க்க ஒன்றிய பாஜக ஆட்சி சதிகளை அரங்கேற்றிய நெருக்கடியான நாட்களில், நமது கட்சி ஜேஎம்எம் உடன் உறுதியாக நின்றது.

2014 மாநில சட்டமன்றத் தேர்தலில் இடதுசாரி கட்சிகளின் அணியை உருவாக்கினோம். பாஜக, காங்கிரஸ் கட்சிகளின் தலைமையிலான கூட்டணிகளுக்கு மாற்றாக மார்க்சிஸ்ட் ஒருங்கிணைப்புக் குழு (எம்சிசி), சிபிஐ, சிபிஎம் போன்ற மாநில இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டோம். சிபிஐஎம்எல் கட்சி தன்வார் தொகுதியை வென்றது. 2019 மாநில சட்டமன்றத் தேர்தலில் கட்சி பகோதர் சட்டப் பேரவைத் தொகுதியைக் கைப்பற்றினாலும் தன்வார் தொகுதியை இழந்தது. மக்கள் தலைவர், படுகொலையுண்ட தோழர் மகேந்திர சிங் மூன்று முறை எம்எல்ஏ வாக இருந்ததுடன், இதுவரை நான்கு முறை பகோதர் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளோம்.



## மே 1: கோடர்மாவில் வேட்புமனு தாக்கல்

கோடர்மா மக்களவைத் தொகுதியில், கோடர்மா, பர்கதா, தன்வார், பகோதர், ஜமுவா மற்றும் கண்டி ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றில், தற்போது பாஜக கட்சிக்கு 3, சிபிஎம்எல், ஜேஎம்எம் மற்றும் சுயேச்சைக்கு தலா ஒரு சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். பகோதர் சட்டமன்ற தொகுதி சிபிஎம்எல் எம்எல்ஏ ஆன தோழர் வினோத் சிங் போட்டியிடுகிறார்.

கோடர்மா மக்களவைத் தொகுதியை, 2004 முதல் பாஜக தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு வருகிறது. 2014 மக்களவைத் தேர்தலில் நாம் 2.67 லட்சம் வாக்குகள் பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்தோம். 2019 இல் இடதுசாரிக் கட்சிகள் மூன்று இடங்களில் போட்டியிட முடிவு செய்தன - சிபிஎம் ராஜ்மஹால், சிபிஐ ஹசாரிபாக் மற்றும் சிபிஐஎம்எல் கொடெர்மாவில் போட்டியிட்டன. 68,000 வாக்குகளுடன் நாம் 3 வது இடத்தைப் பெற்றோம். தற்போது பாஜக, சிபிஎம்எல் இடையேதான் முக்கிய போட்டி நிலவுகிறது.

ஏப்ரல் 28 அன்று தோழர் வினோத் சிங்கிற்கு ஆதரவாக திலையாவில் இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் மாநாடு நடைபெற்றது. இதில் சிபிஐஎம்எல், ஆர்ஜேடி ஜேஎம்எம் கட்சிகளைச் சேர்ந்த ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர். தோழர் திபங்கர், ஜார்கண்ட் மாநில அமைச்சர் சத்யானந்த் போக்தா, நடப்பு எம்எல்ஏ அம்பா பிரசாத், பல கட்சித் தலைவர்கள் உரையாற்றினர்.

அரசமைப்பைக் காப்பாற்றவும், சர்வாதிகாரமான பேரழிவுமிக்க மோடி ஆட்சியை அகற்றவும், தேர்தல் போராட்டத்தில் வெற்றிபெறவும் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் உற்சாகத்தையும் உறுதியையும் இந்த மாநாடு வெளிப்படுத்தியது. தோழர் வினோத் சிங்கிற்கு ஆதரவாக ஒருங்கிணைந்த தீவிரப் பிரச்சாரத்தை நடத்த தீர்மானித்தது. தேர்தலை எதிர்கொள்ள பூத் கமிட்டிகளை ஊழியர்கள் அறிவித்தனர். மே 1, தொழிலாளர் நாளில் வேட்புமனுத் தாக்கல் நடைபெற்றது. பொதுச்செயலாளர் திபங்கர், ஜார்க்கண்ட் முதல்வர் சம்பை சோரன், சிறைவைக்கப்பட்டுள்ள ஹேமந் சோரன் துணைவியும் கந்தே சட்டப்பேரவை தொகுதி வேட்பாளருமான கல்பனா சோரன் உள்ளிட்ட தலைவர்கள் சூழ ஊர்வலமாகச் சென்று தோழர் வினோத்சிங், வேட்புமனு தாக்கல் செய்தார். களத்தில் மகாகட்பந்தனின் வலுவான, விரிவான ஒற்றுமையை வெளிப்படுத்திய நிகழ்வுகள், மக்களுக்கு பதில்சொல்லக்கூடிய, மக்கள் எளிதில் சந்திக்கக்கூடிய, பொறுப்புமிக்க ஒரு மக்கள் பிரதிநிதியை எதிர்நோக்கி கொடர்மா தொகுதி முன்னேறிக் கொண்டிருப்பது தெரிகிறது.

**–சந்திரமோகன்**

# நான்கு கோடிப் பணம்:

## இறைவனை குற்றம் சுமத்தும் நயினார்!

“இருவர் மீதும் குற்றமில்லை இறைவன் செய்த குற்றமது” – பாரதிய ஜனதா கட்சியின் திருநெல்வேலி தொகுதி நாடாளுமன்ற வேட்பாளர் நயினார் நாகேந்திரனிடம் செய்தியாளர்கள், கடந்த 6ம் தேதி சென்னையில் பிடிபட்ட 4 கோடி ரூபாய் பற்றியும் அதைக் காட்டிக் கொடுத்தவர்கள் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களா என்று கேட்ட கேள்விக்கு நாகேந்திரன் இவ்வாறு கூறினார். ஏப்ரல் 6ம் தேதி சென்னையில் இருந்து நெல்லைக்குப் புறப்பட்ட ஏ.சி. ஏ1 பெட்டியில் இருக்கை எண்கள் 26,27,28ல் இருக்கும் 3 நபர்கள் முறையான ஆவணங்கள் இல்லாமல் கட்டு கட்டாகப் பணம் கொண்டு செல்கிறார்கள் என்று தாம்பரம் போலீஸ் கமிஷனருக்கு வந்த தகவலை அடுத்து, தேர்தல் பறக்கும் படையினர் அவர்களைப் பிடித்தார்கள். அவர்களிடம் ரூ 3கோடியே 99 லட்சம் இருந்தது. அவர்கள் மூவரும் பாஜக மாநில துணைத் தலைவரும் திருநெல்வேலி தொகுதி பாஜக வேட்பாளருமான நயினார் நாகேந்திரனுக்குச் சொந்தமான சென்னை புரசைவாக்கம் புளூடைமண்ட் ஓட்டலில் பணிபுரியும் ஊழியர்கள் என்றும் பாஜக உறுப்பினர்கள் என்றும் கூறியதோடு, தாங்கள் அந்தப் பணத்தை நயினார் நாகேந்திரனுக்காகக் கொண்டு செல்கிறோம் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்கள். அதேவேளை நெல்லையில் நாகேந்திரனுக்கு நெருக்கமான கணேஷ்மணி என்பவர் வீட்டிலும் நயினாரின் உறவினர் குணசேகரன் என்பவர் வீட்டிலும் சோதனை நடத்தி, பணம் பொருள்கள், மது பாட்டில்கள் கைப்பற்றப்பட்டன.




அதைத் தொடர்ந்து நயினார் நாகேந்திரன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்தப் பணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் அப்பணம் தனக்குரியது அல்ல என்றும் நயினார் நாகேந்திரன் உடனடியாக அறிவித்தார். பாஜகவின் மாநிலத் தலைவரும் கோவைத் தொகுதி வேட்பாளருமான அண்ணாமலையோ, தேர்தலில் பணம் புழங்குவதும் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதும் சட்டப்படி குற்றம் என்று சமூக அக்கறையுள்ள எவரோதான் காவல்துறைக்கு தகவல் தந்துள்ளார்கள். அதற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றார். என் அப்பன் எட்டாம் நம்பர் குதிருக்குள் இல்லையே என்று சொல்வது போல் உள்ளது என வலைஞர்கள் வறுத்தெடுத்தார்கள். அதனைத் தொடர்ந்துதான் எனக்கும் சம்பந்தமில்லை என் கட்சிக்கார ர்கள் போட்டுக் கொடுக்கவும் இல்லை, “இருவர் மீதும் குற்றமில்லை இறைவன் செய்த குற்றமது” என்று இறைவன் மீது பழி போட்டு நழுவினார் நயினார். பாஜகவினருக்கும் கடவுளுக்கும் இடையேயான உறவு எப்படிப்பட்டது என்பது இப்போது தெரிகிறதல்லவா?

கையும் களவுமாக மாட்டிக் கொண்டவர்களே வாக்குமூலம் கொடுத்த பின்னர் அனைத்து எதிர்க்கட்சியினரும் நயினார் நாகேந்திரனின் வேட்பு மனுவைத் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று சொன்னதற்கு தமிழ்நாடு தலைமை தேர்தல் ஆணையர் சத்தியபிரதா சாகு, 4 கோடி பணம் பற்றி வருமான வரித்துறையினர் விசாரித்து வருகிறார்கள் என்றார். அதன் பின்னர் காவல் துறையினர் நயினாரை விசாரணைக்கு அழைத்த போது தனக்கு 10 நாட்கள் அவகாசம் வேண்டும் என்றார் நயினார். இப்போது அந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தையே தன் கைக்குள் வைத்துள்ள பாஜக, மோடியை அழைத்து வந்து நெல்லையில் கூட்டம் நடத்திய தம் கட்சியின் மாநிலத் துணைத் தலைவரைக் காப்பாற்ற ரொம்பவும் கஷ்டப்படுகிறது.

தமிழகத்தில்

எப்படியாவது சில இடங்களைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதற்காக கடுமையான முயற்சிகள் மேற்கொண்ட பாஜக தலைமை, ஆயிரம் கோடி ரூபாய் வரை தமிழக பாஜகவுக்கு வழங்கி ஒவ்வொரு தொகுதிக்கும் தேர்தல் செலவுக்காகப் பிரித்துக் கொடுக்கச் சொன்னதாகச் செய்திகள் சொல்கின்றன. இதை அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களே, ஒன்றியத் தலைமை வழங்கிய பணத்தை, மாநிலத் தலைவர்கள் மாவட்டத் தலைவர்கள் அமுக்கிவிட்டார்கள், ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட வில்லை என்று புகார் கூறி போஸ்டர் அடித்து ஒட்டியுள்ளதன் மூலம் அது உறுதியாகிறது. அது மட்டுமின்றி, தென் சென்னை வேட்பாளர் தமிழிசையும் இது போன்ற ஒரு புகாரை மாநிலத் தலைவர் மீது கூறி பாஜகவின் மையத் தலைமைக்கு அனுப்பியுள்ளார் என்கிற செய்தியும் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் “தாமரை மலர்ந்தே தீரும்” என்று ஒரு கூட்டத்தில் கூறி அவருக்கே நம்பிக்கையில்லாமல் சிரித்த தமிழிசை அவர்கள், தன் ஆளுநர் பதவியை விட்டுவிட்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். இப்போது அவர் கட்சிக்குள்ளேயே ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு நாறிக் கொண்டிருக்கிறார்கள். மாட்டிய அந்த நான்கு கோடியும் அவ்வாறு கொடுக்க கொண்டு வரப்பட்டதுதான் என்று மற்றொரு செய்தி சொல்கிறது. தேர்தல் பத்திரங்கள் மூலம் அடித்த பணம் எல்லாம் ஆறாய் ஓடும் போது “என்னிடம் பணம் கிடையாது அதனால் நான் தேர்தலில் போட்டியிடவில்லை” என்று நிர்மலா சீதாராமன் சொன்னது, அவர் மக்களை விவரம் இல்லாத முட்டாள்கள் என நினைத்துக் கொண்டிருப்பது தெளிவாகிறது.

அண்ணாலையின் வேட்பு மனுவில் உறுதிமொழிப் பத்திரம் தவறாக தாக்கல் செய்யப்பட்டும் அதை கடைசி நேரத்தில் கமுக்கமாக மாற்றி அண்ணாமலையின் வேட்பு மனு ஏற்கப்பட்டதாக அறிவித்தார்கள். நான்கு கோடி ரூபாய் நயினாருக்குத்தான் கொண்டு செல்கிறோம் என்று நயினாரின் உறவினர்களே கூறிய பின்னரும் விசாரணை நீண்டு கொண்டே செல்கிறது. பாஜக கூட்டணியில் உள்ள இன்னொரு வேட்பாளர் தேவநாதன் யாதவ். இவர் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர். தேவநாதன் யாதவ் தலைவராக உள்ள மயிலாப்பூர் “ஹிந்து பெர்மனென்ட் பண்ட் லிட்” என்ற நிதி நிறுவனத்தில் டெபாசிட் செய்தவர்களின் ரூபாய் 525 கோடியைக் காணவில்லை என்று செய்திவர முதலீடு செய்தவர்கள் அந்த நிறுவனத்தை முற்றுகையிடத் தொடங்கினார்கள். சட்டமன்றத் தேர்தலின் போது பாஜக தலைமை அறிவிப்பதற்கு முன்பே தன்னுடைய வேட்புமனுவைத் தாக்கல் செய்தவர் நயினார் நாகேந்திரன். அப்போது பணத்தை அள்ளி வீசினார். எப்படியும் எம்பி ஆகிவிட வேண்டும் என்று இப்போதும் முதலிலேயே களம் இறங்கினார். கோயில்கள் வாயிலாகவும் விளக்குப் பூசைகள் மூலமும் வாக்குகளைப் பெற முயற்சித்தார். காட்டிக் கொடுத்து பிடிக்கப்பட்ட 4 கோடியால் நயினாரின் கனவு நனவாகுமா என்று அவர் கட்சியைச் சேர்ந்தவர்களே கவலை தெரிவிக்கிறார்கள். குஜராத்தின் சூரத், மத்திய பிரதேசத்தின் இந்தூரில் நடத்தியதுபோல் தமிழ்நாட்டிலும் பாஜகவுக்கு நடத்த முடியாமல் போய்விட்டது. 1 லட்சம் பாஜக ஆதரவு வாக்காளர்கள் பெயரைக் காணவில்லை என்று புதுசா பிரச்சினை கிளப்பினர் அண்ணாமலையும் வானதியும். ஆனால், வாக்களித்தவர்களை அழைத்து வந்து அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மூலம் அம்பலப்பட்டுப் போனார்கள். தேர்தல் சமயத் தில்லு முல்லுவை பெரிய அளவில் நடத்த முடியாமல் அடிவாங்கிவிட்ட பாஜக, வாக்கு எண்ணிக்கைத் தில்லு முல்லுக்கு வழி தேடலாம் தமிழ்நாட்டிலும் இறைவன் மீது பழி போட்டு.

**– சங்கரந்தம்பி**

## தலையங்கம் தொடர்ச்சி...

பேசுவதற்கு அங்குள்ள மக்கள் அஞ்சுகிறார்கள். அந்த அளவுக்கு ரேவண்ணாக்களின் நிலப்பிரபுத்துவ கொடுமைகளும் சாதி வெறி ஆதிக்கமும் இருந்து வருகிறது. இன்றும் கூட தலித் மக்கள் ரேவண்ணாக்களின் வீட்டிற்குள் செல்லமுடியாது என்கிறார்கள். நிலப்பிரபுத்துவ, சாதியாதிக்க மனோபாவம் கொண்ட மதச் சார்பற்ற ! ஜனதாதளமும். கார்ப்பரேட் ஆதரவு சனாதனவாதிகளும் ஒன்றிணைந்து இருப்பதில் வியப்பேதுமில்லைதான். ஆனால், இவர்கள் பாலியல் குற்றவாளியான ரேவண்ணாவை தற்காலிகமாக நீக்கம் செய்துள்ளதாகச் சொல்லிவிட்டு, இப்பிரச்சினை வெளியே வந்ததற்காக எதிர்க் கட்சித் தலைவர்கள் மீது பழி போடுகிறார்கள். பிரஜ்வல் ரேவண்ணாவின் தந்தை எச்.டி.ரேவண்ணா இது எப்போதோ நடந்தவை எதிர்க்கட்சிகள் தங்கள் ஆதாயத்திற்காக இதை தேர்தல் நேரத்தில் வெளியிட்டுள்ளார்கள் என்று தன் மகனின் குற்றத்தை நியாயப்படுத்துகிறார். சித்தப்பா முன்னாள் முதல்வர் எச்.டி.குமாரசாமி, காங்கிரஸ் தலைவர் சிவக்குமார்தான் இந்த வீடியோக்களை வெளியிட்டுவிட்டார், இதன் மூலம் ஆயிரக்கணக்கான பெண்களின் வாழ்க்கையை நாசப்படுத்திவிட்டார் என்கிறார். பாஜகவின் தேவராஜ் கவுடாவும் இதையே சொல்கிறார். இந்த தேவராஜ் கவுடாவிடம்தான் ரேவண்ணாவின் பாலியல் கொடுமைகள் அடங்கிய வீடியோக்களின் பென்டிரைவைக் கொடுத்தேன் என்று ரேவண்ணாவின் முன்னாள் கார் ஓட்டுநர் கார்த்திக் கூறியிருக்கிறார். பாஜக-மஜத தலைவர்களுக்கு ரேவண்ணா பல பெண்களின் வாழ்க்கையை நாசம் செய்தது தப்பில்லையாம். அது வெளி வந்ததுதான் தப்பாம். இப்படிப்பட்டவர்கள்தான் மீண்டும் அரியணை ஏறி ஆட்சி நடத்தத் துடிக்கிறார்கள். இந்திய மக்கள், பாலியல் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் பாஜகவினருக்கு செல்லும் இடமெல்லாம் செருப்படி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தில்லுமுல்லுகள் இல்லையெனில் சங்கிகள் ஆட்சியில் இருந்து தூக்கியெறியப்படுவது உறுதி.

# பாதிக்கப்படும் மக்களுக்கு உதவி செய்வதுதான் சிபிஅய்எம்எல் எம்எல்ஏக்களின் கலாச்சாரம்

**தோழர் சுதாமா பிரசாத்**
**அரா (பிகார்) மக்களவைத் தொகுதி வேட்பாளர்,**
**தீப்பொறி முதன்மை ஆசிரியர் வீ. சங்கருக்கு அளித்த நேர்காணல்**



***அரா தொகுதி வேட்பாளர் என்ற முறையில் தங்கள் கருத்து என்ன?***

அரா தொகுதி என்பது அடிப்படையில் போஜ்பூர் மாவட்டம். இங்கு கட்சி ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக மிக நீண்ட காலமாக போராடி வருகிறது. இது விவசாயம் மேலோங்கிய ஒரு தொகுதி. சோன் நதி இந்த மாவட்டத்தின் ஜீவ நதி. மழைக் காலத்தில் பாசன நீர் தட்டுப்பாடு இருக்காது. கோடைக் காலத்தில் நீர் குறைவாகத்தான் கிடைக்கும். ஆட்சியாளர்களுக்கு சோன் நதியை தனியாருக்குத் தாரை வார்ப்பது எனும் திட்டம் 2014, 2019களில் இருந்தது. ஆனால், பல்வேறு காரணங்களால் அது இன்று வரை நடக்கவில்லை. மாவட்டத்தில் சோன் நதி பயன்பாட்டைத் தடுத்து நிறுத்துவதற்கு எதிராக நாம் போராடி வந்திருக்கிறோம்.

மாவட்டத்தின் தெற்குப் பகுதிகளில் நதிநீர்ப் பாசனம் நடைபெற்று வருகிறது. இதர பகுதிகளில் குழாய் நீர்ப் பாசனம் நடைபெற்று வருகிறது. அந்தப் பகுதிகளில் விவசாயம் மிக மோசமடைந்து வருகிறது. எனவே, விவசாயத்தைக் காப்பது, வேலைவாய்ப்பு, உணவு ஆகியன முக்கிய பிரச்சனைகளாக முன்வந்துள்ளன. போஜ்பூர் மக்களின், விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின், இளைஞர், மாணவர்களின் கல்வி, சுகாதாரம், உணவு போன்ற அடிப்படை விசயங்கள் விவசாய வளர்ச்சியோடு நெருக்கமான தொடர்புடையதாக இருக்கிறது. ஆனால், விவசாயம் மிகக் கடுமையாக நசிந்து கொண்டிருக்கிறது. இது மக்களுக்கு நன்றாகவே தெரிகிறது. இதற்கு எதிராகப் போராடுவதற்காகத்தான் போஜ்பூர் மக்கள் என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்தார்கள். விவசாயத்தைக் காப்பதற்காக, விவசாயத்தை லாபகரமாக்குவதற்காக போஜ்பூர் மக்கள் குரலை நான் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருப்பேன். மக்களவைக்கு உள்ளும் வெளியிலும் மக்கள் போராட்டத்தை நடத்துவேன்.

***இந்தத் தேர்தலில் பிஜேபி - தேசிய ஜனநாயக கூட்டணியின் நிலைமை எப்படி இருக்குமென கருதுகிறீர்கள்?***

கடந்த பத்தாண்டுகளில் பிஜேபி எம்பிக்கள் யாரும் மக்கள் பிரச்சனைகளை, போஜ்பூர் மாவட்டப் பிரச்சனைகளை மக்களவையில் எழுப்பவே இல்லை. இந்தத் தொகுதியிலிருந்து ஒரு ஒன்றிய அமைச்சர் இருக்கிறார். ஆளும் கட்சிக்கு எதிராக அவர் என்றும் பேசியதே இல்லை. அரசு செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டாமல் இங்கிருக்கும் பிரச்சனைகளை யாரும் தீர்க்கவே முடியாது. அப்படி ஒருவேளை அவர் ஏதாவது செய்திருந்தால் அவர் என்ன செய்தார், எந்தப் பிரச்சனையை எழுப்பினார் என்பதை மக்கள் மன்றத்தின் முன்னால் வைத்திட வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் அவர் மக்களுக்காக ஆற்றிய பணிகளின் பட்டியல் என்ன என்பதை முன்வைத்திட வேண்டும். தொகுதிக்கு எவ்வளவு நிதி வந்தது? எவ்வளவு? என்ன காரணத்துக்காக செலவு செய்யப்பட்டது? என்பதை முன்வைத்திட வேண்டும். 17.5 கோடி நிதி செலவே செய்யப்படவில்லை. அப்படியானால், அவர் என்ன செய்து கொண்டிருந்தார், சோன் நதி தனியார்மயமாக்கத்துக்கு எதிராக, வேலைவாய்ப்புக்காக, விவசாயத்தைக் காப்பதற்காக என்ன செய்தார்? எதுவும் செய்யவில்லை. மக்கள் கடும் துன்பத்திலும் துயரத்திலும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். கடைக்காரர்கள், சிறுவியாபாரிகள் அவர்களுக்கும் கூட எதுவும் செய்திடவில்லை. கொரானா காலத்தில் மக்கள் கடும் துயரத்தை அனுபவித்தபோது, அவர்களுக்காக எந்த உதவியும் இந்த தொகுதியின் மக்களவை உறுப்பினரும், அமைச்சருமான அவர் எதுவும் செய்திடவில்லை.

ஆனால், நாங்கள், சிபிஐஎம்எல் கட்சியினர் மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்தோம். அதைத் துடைத்திடுவதற்காக பணியாற்றினோம். பயன்களைப் பெற்றுத் தந்தோம். கொரானா நோயைக் கண்டு அனைவரும் பயந்து வீடுகளில் அடைந்து கிடந்தபோது நாங்கள் மருத்துவமனைகளுக்கு வரும் கொரானா நோயாளிகளுக்கு உதவினோம். மருத்துவமனைகளில் நோயாளிகள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிக்கு அருகிலேயே தங்கி இருந்து மக்களுக்கான பணிகளைச் செய்தோம். அவர்களது தேவைகளை பூர்த்தி செய்தோம். மருத்துவமனைப் பணியாளர்களுக்கு உதவி செய்தோம். வேலைதேடி டெல்லி, மும்பை போன்ற நகரங்களுக்குச் சென்றிருந்த புலம்பெயர் தொழிலாளர்களின் ஆதரவற்ற குடும்பங்களைச் சந்தித்து அவர்களுக்கு உதவினோம். மக்கள் மத்தியில் வசூல் செய்து, துன்பப்படும் குடும்பங்களுக்கு கோதுமை மாவு, அரிசி, சமையல் பொருட்கள் கொடுத்து உதவினோம். போஜ்பூர் மாவட்ட சிபிஐஎம்எல் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களான நாங்கள் அத்தகைய மக்கள் நல்வாழ்வுப் பணிகளை ஆற்றியிருக்கிறோம். ஆனால், அத்தகைய துன்ப காலத்தில் தொகுதியின் மக்களவை உறுப்பினரென்றே தெரியவில்லை. போஜ்பூர் நாளன்றோ, பீகார் நாளன்றோ கூட அவரைக் காண முடியவில்லை.

1942ல் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக போஜ்பூரில் நடந்த கலகத்தில் 7 பேர் தியாகியானார்கள். அவர்கள் நினைவாக தோழர் ராம் நரேஷ் ராம் நினைவுத் தூண் எழுப்பினார். அங்கு ஒருநாள் கூட அரா தொகுதி

மக்களவை உறுப்பினர் சென்றதே இல்லை. யாரையும் சந்திப்பதே இல்லை. மக்களின் துன்ப துயரங்களில் பங்கேற்றதே இல்லை. விவசாயிகள் கடும் துன்பத்தில் இருக்கும்போது அவர்களைச் சந்திப்பதே இல்லை. மக்கள் பிரதிநிதி என்பவர் இது போல ஏழைகளின், ஒடுக்கப்பட்டோரின், விவசாயிகளின் துன்ப துயரங்களில் பங்கேற்க வேண்டும். இது ஒரு மக்கள் பிரதிநிதிக்கான குறைந்த பட்ச தகுதியாகும். அதை இந்த தொகுதியின் எம்.பி ஒரு போதும் செய்ததில்லை.

**கடந்த தேர்தலில் பீகாரில் பிஜேபி பெரும் வெற்றி பெற்றது. இந்தத் தேர்தலில் நிலைமை என்ன?**

*2019ல் பெரும் வெற்றி பெற்றிருந்தாலும் இந்த தேர்தலில் பிஜேபி கூட்டணி படுதோல்வியைச் சந்திக்கும். காலம் மாறி விட்டது. 40 தொகுதிகளில் 25-30 தொகுதிகள் இந்தியா கூட்டணி வெல்லும். பிஜேபி கூட்டணிக்கு 12 தொகுதி கூட கிடைப்பது பெருத்த சந்தேகம்தான். இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ஆறு மாதத்தில் ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம்; அக்னிபாத் திட்டத்தை திரும்பப் பெறுவோம், மூன்று கார்ப்பரேட் ஆதரவு வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறுவோம், குறைந்தபட்ச ஆதார விலைச் சட்டம் கொண்டுவருவோம் போன்ற வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அவை நிறைவேற்றப்படும்.*

**பிஜேபியின் கார்ப்பரேட் தேர்தல் பத்திரங்களுக்கு எதிராக நீங்கள் வீட்டுக்கு 20 ரூபாய் நிதி சேகரிக்கும் இயக்கத்தை துவங்கி இருக்கிறீர்கள். அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

*வீட்டுக்கு 20 ரூபாய் இயக்கம் மக்கள் மத்தியில் பெருத்த உற்சாகத்தையும் வரவேற்பையும் பெற்றிருக்கிறது. இது ஒரு புதிய விசயம் அல்ல. சிபிஐஎம்எல் கட்சி எப்போதுமே மக்களை மட்டுமே சார்ந்து செயல்படும் மக்கள் கட்சியாகும். அது எப்போதுமே விவசாயத் தொழிலாளர், ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், சிறு வியாபாரிகள் போன்ற சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்துதான் செயல்பட்டு வருகிறது. அதுபோன்ற உழைக்கும் மக்களைச் சார்ந்து தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் மக்கள் சிபிஐஎம்எல் கட்சித் தோழர்களை சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்தார்கள். அதே போல அத்தகைய பணியைத் தொடர்வதற்காக மக்களவைக்கும் கண்டிப்பாகத் தேர்ந்தெடுப்பார்கள். பல்லாயிரம் கோடி ரூபாய்களை தேர்தல் பத்திரங்கள் மூலம் கார்ப்பரேட்டுகளிடமிருந்து பெற்றிருக்கிறது பிஜேபி. அதற்கு எதிராக நாங்கள் துவங்கி இருக்கும் வீட்டுக்கு 20 ரூபாய் இயக்கம் மாபெரும் மக்கள் இயக்கமாக மாறி இருக்கிறது.*

**இந்தத் தேர்தலில் மக்களின் முக்கிய பிரச்சனைகள் என்ன?**

*மிகப்பெரும் பிரச்சனை என்பது நாட்டின் ஜனநாயகம் குறித்தது ஆகும். அடுத்தது அரசமைப்புச் சட்டம். பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் முக்கிய பங்காற்றி இயற்றிய அரசமைப்புச் சட்டத்தை ஒழித்து விடவேண்டுமென பிஜேபி மும்முரமாக இருக்கிறது. இட ஒதுக்கீட்டை ஒழித்திட வேண்டுமென கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. இதுவே முக்கிய பிரச்சனை. பாபாசாகேப் இயற்றிய அரசமைப்புச் சட்டத்தினால்தான் நாம் அனைவரும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறோம். வாக்கு பெறுவதற்காக அனைத்துக் கட்சிகளும் மக்களிடம் செல்கின்றன. ஆனால், மக்களுக்குக் கிடைத்துவரும் குறைவான வேலைவாய்ப்பையும் உணவு, உடை இருப்பிடத்தையும் பறிப்பதற்கான வேலையைத்தான், விலைவாசியை அதிகரிக்கும் வேலையைத்தான், விவசாயத்தைச் சீரழிக்கும் வேலையைத்தான், கார்ப்பரேட்டுகளுக்கு, அதானி-அம்பானிகளுக்கு சேவை செய்யும் வேலையைத்தான் ஒரு நாளில் 24 மணி நேரமும், வருடத்தில் 12 மாதங்களும் பிஜேபி செய்து வருகிறது. இதற்கு எதிராகத்தான் நாங்கள் போராடி வருகிறோம். அந்தப் போராட்டத்தில் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதில் கண்டிப்பாக வெற்றி பெறுவோம்.*

*சென்று எங்களுக்கு வாக்களியுங்கள், நாங்கள் உங்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால், மக்களோ நாங்கள் பணம் பெற்றுக் கொண்டு வாக்களிப்பவர்கள் அல்ல, தேர்தலுக்காக பணமும் கொடுத்து, வாக்கும் அளிப்பவர்கள் என பதில் அளித்து அவர்களைத் திருப்பி அனுப்பினார்கள். இது ஒரு சுவையான அனுபவம். இது ஒரு கிராமத்தில் மட்டுமல்ல, இதுபோல பல கிராமங்களிலும் நடந்து வருகிறது. இது கட்சி மீதான மக்களின் நம்பிக்கையை, இது ஒரு மக்கள் கட்சி என்பதைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது.*

*நாங்கள் 20 ரூபாய் கூப்பன் அச்சடித்திருக்கிறோம். வீடுவீடாகச் சென்று மக்கள் மத்தியில் வசூல் செய்கிறோம். 20 ரூபாயில் என்ன நடக்கும் என சிலர் யோசிக்கலாம். ஆனால், யார் பசியால் வாடிக்கொண்டிருக்கிறார்களோ, யார் பெரும்பான்மையாக இருக்கிறார்களோ அவர்கள்தான் அந்த நிதியை வழங்குகிறார்கள். ஏனென்றால் இது மக்கள் கட்சி. கார்ப்பரேட்டுகளின் கட்சி அல்ல.*

*கார்ப்பரேட் கட்சிகள் கார்ப்பரேட்டுகளிடமிருந்து நிதி பெறுகிறார்கள். அந்த கார்ப்பரேட்டுகளுக்கு பணம் எங்கிருந்து வருகிறது? அரசு கஜானாக்களில் சேரும் மக்கள் வரிப்பணம்தான், கடன் உள்ளிட்ட பல்வேறு பெயர்களில் கார்ப்பரேட்டுகளிடம் செல்கிறது. இந்த ஆட்சியாளர்கள் வரிப்பணத்தை எடுத்துக் கார்ப்பரேட்டுகளுக்கு கடனாக கொடுப்பார்கள். பின்னர் அந்த கடனை ரத்து செய்வார்கள். இப்படிப்பட்ட எல்லாவற்றையும் மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மோடி அரசாங்கம் என்னென்ன மக்கள் நலத் திட்டங்களை எப்படி எல்லாம் நீர்த்துப்போகச் செய்திருக்கிறார்கள், எதையெல்லாம் ரத்து செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவை அனைத்தும் தமது வாழ்வாதாரப் பிரச்சனைகள் என்பதை மக்கள் புரிந்துகொண்டு வருகிறார்கள். வேலைவாய்ப்புப் பிரச்சனை முதல் விவசாயப் பிரச்சனைகள் வரை மோடி அரசு என்னவெல்லாம் சீரழித்து வருகிறார்கள் என்பதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எதிராக, பிஜேபிக்கு எதிராக, தக்க பதிலடி கொடுக்க மக்கள் தயாராகி வருகிறார்கள்.*

**தொடர்ச்சி 22ஆம் பக்கத்தில்...**

### எஸ்விஆர் பேட்டி தொடர்ச்சி

# மார்க்ஸிய கலைச்சொற்கள் நூல் பற்றி..

### தோழர் எஸ்விஆருடன் ஒரு நேர்காணல்



*தீப்பொறி 16-30 ஏப்ரல் 2024 இதழில் வெளியான பேட்டியின் தொடர்ச்சி...*

## அந்நியமாதல்

மார்க்ஸின் 'பொருளாதார, தத்துவக் கையெழுத்துப் பிரதிகள் 1844' என்ற கட்டுரைத் தொகுப்புதான் உலகெங்கும் மார்க்ஸின் 'அந்நியமாதல்' கோட்பாட்டை அறிமுகப்படுத்தியது. ஆனால் மார்க்ஸின் முதிர்ச்சியடைந்த படைப்புகளில் இன்னும் பல பரிமாணங்களையும் தூலமான விளக்கங்களையும் பெற்று அக்கருத்தாக்கம் தொடர்ந்து நிலவி வந்துள்ளது. அது மார்க்ஸின் இளமைக்கால பக்குவப்படுத்தப்படாத கருத்து என்று நிராகரிப்பவர்கள், அக்கருத்தாக்கம் அவரது கடைசிகால எழுத்துகள் வரை பல வடிவங்களில் முதிர்ச்சி அடைந்துள்ளதைப் பார்க்கத் தவறுகிறார்கள். வளர்ச்சி அடைந்த மேற்கத்திய, அமெரிக்க நாடுகளில் ஒவ்வொரு வேலையும் எவ்வளவு சலிப்புத் தட்டுவதாக உள்ளது? மார்க்ஸ் கூட சொல்வார், நவீன சாதனங்களும், இயந்திரங்களும் வருவதற்கு முன்பாக வேலைகளில் உழைப்பாளிக்கு உழைப்பதில் ஒரு சுவாரசியம் இருந்தது. அது நவீன தொழிற்சாலையாக மாறுகிறது. தற்போது உள்ள நவீன தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் விரக்தியுடன் உள்ளனர். நிறைவான மனநிலை இல்லை. ஆக 'அந்நியமாதல் ' என்பது இன்றைய முக்கியமான கருத்தாக்கமாக உள்ளது. அதை விளக்க வேண்டியுள்ளது. முக்கியமான மார்க்ஸியக் கருத்தாக்கங்களைப் பற்றி அவ்வப்போது குறிப்புகள் எடுத்து வைத்திருந்தேன். பெரியார் சொல்வார், யாருமே செய்யாத வேலை, அதனால் அதை தோளில் போட்டு சுமக்கிறேன் என்று. அதுபோலத்தான், 'மார்க்ஸியக் கலைச் சொற்கள்' நூலை எழுதினேன். பலருடைய ஒத்துழைப்பையும் கேட்டேன். யாருமே அக்கறை காட்டாததால் நானே அத்தகைய முயற்சியை மேற்கொண்டேன்.

## ஆசிய உற்பத்தி முறை பற்றி

ஆசிய உற்பத்தி முறை பற்றிய முறைப்படியான, விரிவான, அறிவார்ந்த விவாதங்களை இந்தியாவிலுள்ள ஒரு சில கல்விபுலம்சார் மார்க்ஸிய அறிஞர்கள் மட்டுமே மேற்கொண்டுள்ளனர். 'ஜெர்மன் கருத்துநிலை' (German Idoelogy) என்ற நூலில்தான் மார்க்ஸ் (மற்றும் எங்கெல்ஸ்) வரலாற்றில் சமுதாயம் அடைந்துள்ள பல்வேறு கட்டங்களைப் பற்றி முதன் முதலாக எழுதுகின்றனர். 'அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு' என்ற நூலில்தான் ஆசிய உற்பத்தி முறை பற்றி மார்க்ஸ் முதன் முதலில் எழுதுகிறார். அந்த உற்பத்தி முறை, தென் அமெரிக்க, அய்ரோப்பிய சமுதாயங்கள் சிலவற்றிலும் இருந்தது என்று வேறு சில நூல்களில் கூறுகிறார். ஆசிய உற்பத்தி முறையின் முக்கிய அம்சங்கள் என்று அவர் தொடக்கத்தில் எழுதியவை பின்வருமாறு; மற்ற நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் பிரதிநிதியாக அரசர்கள் இருந்தார்கள். ஆசிய உற்பத்தி முறையில் அப்படி இல்லை. அரசு தான் நிலம், நீர், வணிகம் முதலிய அனைத்துக்கும் ஒரே ஒரு உடைமையாளர். நீர்ப்பாசனம், சாலைப் போக்குவரத்து செய்வதில் அரசுதான் பொறுப்பாக இருந்தது. ஆசிய உற்பத்தி முறை என்ற கருத்தாக்கத்தை வளமான விவாதத்திற்கு உட்படுத்தியிருந்தால் சாதியைப் பற்றி கூடுதல் புரிதலை இந்தியக் கம்யூனிஸ்டுகள் பெற்றிருக்க முடியும் என்பது என் தாழ்மையான கருத்து. மூன்றாவது அகிலத்தில் லெனினுக்குப் பிறகு தலைமை வகித்த ஸ்டாலின், 'ஆசிய உற்பத்தி முறை' பற்றிய விவாதத்தை தடை செய்தார். புராதன அடிமை முறை சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம், சோசலிச சமுதாயம் என்ற கட்டங்களினூடாகவே சமுதாய வளர்ச்சி ஏற்படும் என்ற நேர்கோட்டுப் பார்வையை வலுப்படுத்தினார். இது மார்க்ஸ் கொண்டிருந்த கருத்துக்கு நேர் எதிரானது. சங்ககால தமிழகத்தில் ஆசிய பாணி உற்பத்தி முறை பற்றி சிலர் தற்போது விவாதிக்கத் துவங்கியுள்ளனர்.

மேற்கு அய்ரோப்பிய சமுதாய வளர்ச்சி மாடலை அப்படியே பிற நாடுகளுக்குப் பிரயோகிக்க முடியாது என்பதை ரஷிய நரோத்னிக்குகளிடம் நடத்திய விவாதங்களின் போது மார்க்ஸ் தீர்மானகரமாக வலியுறுத்துகிறார். மூலதன உருவாக்கத்தில் கணிசமான பகுதி இங்கிலாந்தில் நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகளின் பங்கு ஆகும். அது இங்கிலாந்து மற்றும் சில மேற்கத்திய நாடுகளுக்கும் பொருந்தும். ஆனால், இதனை எல்லா நாடுகளுக்கும் பொதுச் சூத்திரமாக கொள்ளக்கூடாது என மார்க்ஸ் எழுதினார். அதையே பொதுவான சூத்திரமாக எடுத்து கொண்டு நரோத்னிக்குகள் சிலர் மார்க்சை விமர்சித்தனர். ரஷ்யாவில் முதலாளியம் வரவேண்டும்; பாட்டாளி வர்க்கம் அவதிக்குள்ளாக வேண்டும். அதன் பிறகு சோசலிசம் வரும் என மார்க்ஸ் கூறுவதாக அவர்கள் வாதிட்டனர். அதற்கு கடுமையான பதிலை எழுதுகிறார் மார்க்ஸ், "என்னை வரலாற்றுக்கு மேற்பட்டவனாய் நிறுத்துகிறார்கள், அப்படிச் செய்ததன் மூலம் எனக்கு இல்லாத பெருமையை வழங்குகிறார்கள்" என்று அவர்களைக் கிண்டல் செய்தார் மார்க்ஸ். ரோமாபுரியில் அடிமைச் சமுதாயம் ஒழிந்து பாட்டாளி

வர்க்கம் பிறக்கிறது. புரோலட்டேரியன் (பாட்டாளி) என்ற சொல் வருகிறது. இழப்பதற்கு உழைப்பைத் தவிர வேறேதும் இல்லாத ஒரு வர்க்கம் உதிக்கிறது. பாட்டாளி வர்க்கம் பிறந்தவுடன் அங்கு ஏன் முதலாளியம் வளர்ச்சியடைவில்லை, ஏன் அது ஆரம்ப நிலையில் கூட இல்லை என்ற கேள்வியை எழுப்பினார் மார்க்ஸ். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவிதமான வளர்ச்சி இருக்கும். மேற்கு நாடுகளுக்குப் பொருந்தக்கூடிய ஒன்றை பொதுச் சூத்திரமாக மாற்றக் கூடாது என்கிறார். எதிர்கால சோசலிசம் பற்றி 'மூலதனம்' முதல் பாகத்தின் ஜெர்மன் பதிப்பின் முன்னுரையில் மார்க்ஸ் சொல்கிறார்: "எல்லாக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய சமையல் குறிப்பை நான் எழுதவில்லை". ஸ்தூலமான நிலைமைகளைப் படித்து ஸ்தூலமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என லெனின் சொல்கிறார்.

புதிதாக வரும் விசயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். மார்க்சியத்திற்கு சவால் விடுக்கும் புத்தகங்களுக்கு மார்க்சியப் பார்வையிலிருந்து பதில் சொல்ல வேண்டும் என்று என்னாலான அனைத்தையும் செய்திருக்கிறேன். ஆனால், எதையுமே ஒழுங்காகவும் நேர்மையாகவும் புறநிலைத் தன்மையுடனும் படிக்காத தமிழக மார்க்ஸிய இயக்கங்களிலுள்ள சிலர் எனக்கு 'திரிபுவாதி', 'குழப்பவாதி', 'ஏகாதிபத்திய ஏஜண்ட்' என்ற பட்டங்களைச் சுமத்தியுள்ளனர். அவர்களில் பலர் காணாமல் போய்விட்டனர். இன்னும் சிலர் தொடர்ந்து அம்பதாண்டுகளுக்கு மேலாக குறுங்குழுவாதக் குட்டையில் குளிப்பதில் ஆனந்தம் பெற்று வருகிறார்கள். இவற்றையெல்லாம் நான் பொருள்படுத்தியிருந்தால், வேறு எந்த ஆதாயத்துக்காகவுமின்றி, அரசியல் கடமையாக பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியிருக்க முடியாது.

இன்று நிலைமை மாறிவிட்டது. முதன்மையான இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் என்னுடன் தோழமை பாராட்டி வருகின்றனர். தீர்க்க முடியாத கடும் நோயால் நான்காண்டுகளாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் எனக்கு இது பெரும் ஆறுதல். களப்பணியாளர்களுக்குப் படிப்பதற்கு நேரம் குறைவு. இருப்பினும் அதைப் பயன்படுத்தி அவர்கள் தங்கள் மார்க்ஸிய அறிவை இடைவிடாது வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், மார்க்ஸியம்தான் நமக்கான ஒரே ஒளிவிளக்கு. அது இல்லாவிட்டால் குருட்டுப் பூனை விட்டத்தில் தாவுவது போல அர்த்தமற்ற, நமது சக்தியை விரயமாக்குகிற, வேலைகளில் மூழ்கிப்போவோம்.

**பேட்டி முடிவுற்றது**

20ஆம் பக்கம் தொடர்ச்சி...

***வெற்றிப் பரப்புரையைத் தாங்கள் என்ன வடிவங்களில் செய்து வருகிறீர்கள்?***

*நான் சுமார் 46 ஆண்டுகளாக சிபிஐஎம் எல் கட்சியில், மக்கள் மத்தியில் பணியாற்றி வருகிறேன். கலாச்சார அரங்கில், இளைஞர் அரங்கில், இந்திய மக்கள் முன்னணியில், விவசாயிகள் அரங்கில், கட்சியில் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று பணியாற்றி இருக்கிறேன். இப்போது சட்டமன்ற அரங்கிலும் பணியாற்றி வருகிறேன். சட்டமன்ற அரங்கம் தவிர வேறு பல்வேறு அரங்குகளிலும் இன்றும் பணியாற்றி வருகிறேன். கிராமங்களில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் கூட்டங்கள் நடத்துகிறோம். அவர்கள் பிரச்சனைகளைக் காதுகொடுத்துக் கேட்கிறோம். அவர்கள் பிரச்சனைகள் குறித்து சட்டமன்றத்தில் கேள்வி எழுப்புகிறோம். அந்தப் பிரச்சனைகள் குறித்து சட்டமன்றத்திற்கு வெளியே நடக்கும் மக்கள் போராட்டங்களிலும் பங்கேற்கிறோம். நாங்கள் தேர்தல் சமயத்தில் மட்டுமே மக்களிடம் செல்பவர்கள் அல்ல, மக்கள் பிரச்சனைகளை அன்றாடம், ஆண்டு முழுவதும் எழுப்பி வருகிறோம். போராடி வருகிறோம். கட்சிப் பதாகையின் கீழ் செயல்பட்டு வருகிறோம்.*

***தமிழ்நாட்டு மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது, மோடி அரசு எந்த நிதி உதவியும் செய்ய மறுத்துவிட்டது. ஆனால், தாங்கள் உள்ளிட்ட பீகார் மாநில சிபிஐஎம்எல் கட்சி எம் எல் ஏ க்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வெள்ள நிவாரண உதவி செய்தீர்கள்...?***

*வெள்ளத்தின் காரணமாக மக்கள் எவ்வளவு துயரங்களை அனுபவிப்பார்கள், அனுபவித்தார்கள் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது. பீகார் மக்கள் வெள்ளத்தால் எப்படி பாதிக்கப்படுகிறார்களோ அதைப் போலத்தான் தமிழ்நாட்டு மக்களும் பாதிக்கப்படுவார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதுதான் சிபிஐஎம் எல் கட்சியின், கட்சி எம் எல் ஏ க்களின் கலாச்சாரம். பாதிக்கப்படும் அனைவரையும் எமது மக்களாகவே காண்கிறோம். அதனால்தான், பீகார் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென வழங்கப்படும் சம்பளத்திலிருந்து எங்கள் சொந்தப் பணத்தை நாங்கள் தமிழ்நாட்டு மக்கள் வெள்ள நிவாரணத்திற்கென கொடுத்து உதவினோம். அதே கடமையை ஆற்றி இருக்க வேண்டிய மோடி அதைச் செய்யவில்லை என்பது மோடியின், பிஜேபி அரசின் குரூரத் தன்மையைத்தான் சுட்டிக்காட்டுகிறது. மோடி ஒரு ஜனநாயக அரசின், கூட்டாட்சி அரசின் பிரதம அமைச்சராக நடந்து கொள்வதில்லை. அவர் ஒரு சங்கிப் படையின், மதவெறி அரசின் மன்னராக, சர்வாதிகாரியாக நடந்து கொள்கிறார்.*

***தமிழ்நாட்டு மக்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?***

*இந்தியா கூட்டணியை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதே தமிழ்நாட்டு மக்களுக்கு எனது வேண்டுகோள். ஒன்றியத்தில் இந்தியா கூட்டணி அரசமைந்திட வேண்டும், தமிழ்நாட்டின் அனைத்து தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்ய வேண்டும், அதற்கு தமிழ்நாட்டு மக்கள் பணியாற்றிட வேண்டும் என்பதே தமிழக மக்களுக்கு நான் சொல்லும் செய்தி.*

*கடந்த பத்தாண்டு கால பிஜேபி கூட்டணியின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து மக்கள் விடுதலை பெற்றிட வேண்டும், ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தருகிறேன் என்று சொல்லி ஏமாற்றிய, இந்திய மக்களின் வங்கிக் கணக்குகளில் 15 லட்சம் போடுகிறேன் எனச் சொல்லி ஏமாற்றிய, விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குகிறேன் எனச் சொல்லி ஏமாற்றிய மோடி ஆட்சியை விரட்டியடிப்போம். இந்த நாட்டை மீண்டும் அழகானதாக, பலம் பெற்றதாக, சுயசார்பு கொண்டதாக மாற்றிடுவோம். அதற்காக கரம் கோர்த்திடுவோம் என்பதுதான் தமிழ்நாட்டு மக்களுக்கு பிகார் மக்கள் சார்பாக நான் சொல்ல விரும்பும் செய்தி.*

# அச்சுறுத்தல்களை மீறி

## தூத்துக்குடி மாநகராட்சி ஓட்டுனர், தூய்மைப் பணியாளர் பேரவை.

ஏப்ரல் 27 அன்று தூத்துக்குடி மாநகராட்சியின் தூய்மை பாரத இயக்கம் ஓட்டுனர், தூய்மைப் பணியாளர் நலச் சங்கத்தின் 5 வது பொதுப் பேரவை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது ஏஐசிசிடியு இணைப்பு சங்கமாக செயல்படும் என்றும் முடிவு செய்யப்பட்டிருந்தது.

தொழிலாளர், சங்கமாக திரண்டால் கொடி பிடிப்பார்கள், கோரிக்கை வைப்பார்கள், நிர்வாகத்தில் நடக்கும் ஊழல்களை அம்பலப்படுத்துவார்கள் என அஞ்சிய ஒப்பந்ததாரரும் மாநகராட்சி நிர்வாகமும் தொழிலாளரை அச்சுறுத்தி அடி பணிய வைத்து விடலாம், சங்கமாக அணி திரள்வதை தடுத்து விடலாம் என நினைத்தனர். சங்கத்தின் கருவாக செயல்பட்ட தோழர் பொன்ராஜ் அவர்களுக்கு வேலை மறுத்தனர். சில பெண் தொழிலாளரை அணுகி பாலியல் தொல்லை கொடுத்ததாக சங்க அமைப்பாளர்கள் மீது பொய் புகார் கொடுக்கச் சொல்லி ஏற்பாடு செய்தனர். தொழிலாளர்கள் உறுதி பட மறுத்ததன் மூலம் ஏஐசிசிடியு சங்கம் நிலை பெற்றுவிட்ட செய்தி நிர்வாகத்துக்கு கிடைத்தது. ஏஐசிசிடியு மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் சகாயம் உள்ளிட்ட தலைவர்கள் மாநகராட்சி ஆணையரை சந்தித்துப் பேசிய பிறகு வேலை தர ஒப்புக் கொண்ட நிர்வாகம் அவரை 10 கிமீ தள்ளியுள்ள வேறு மண்டலத்துக்கு மாற்றியது. அதை சங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் அதே இடத்தில் பணியமர்த்துவதற்கான போராட்டம் தொடரும் நிலையில், ஏப்ரல் 27 அன்று திட்டமிட்டபடி தோழர் பொன்ராஜ் தலைமையில் சங்க பொதுப் பேரவை நடைபெற்றது.

பொதுப் பேரவையில் ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் தோழர் சங்கரபாண்டியன், அகில இந்திய தூய்மைப் பணியாளர் கூட்டமைப்பின் அகில இந்திய நிர்வாகிகள் பாலசுப்பிரமணியன், வேல்முருகன், ஏஐசிசிடியு மாநில துணைத் தலைவர் வெங்கடாச்சலம், கோவை தூய்மைப் பணியாளர் சங்க நிர்வாகிகள் சந்தானம், வள்ளி ஆகியோருடன் தூத்துக்குடி சிபிஐ எம்எல் கட்சி பொறுப்பாளர் தோழர் முருகன் ஏஐசிசிடியு தோழர் சிவராமன் ஆகியோரும் வாழ்த்தி உரையாற்றினர். இந்த நிகழ்வில், ஓட்டுனர்கள், தூய்மைப் பணியாளர்கள் என 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதால் மண்டபம் நிரம்பி வழிந்தது.

தொழிலாளரின் பணிப் பாதுகாப்பு, வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர் ஈட்டுறுதி போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் முறையான அமலாக்கம், அரசு அறிவித்த குறைந்தபட்ச சட்டக் கூலி பெறுவது, ஒப்பந்தத் தொழிலாளர் பணி நிரந்தரம், ஓட்டுனர்களுக்கு 7 ஆண்டு சிறை தண்டனை விதிக்கும் மோட்டார் வாகன சட்ட திருத்தத்தை திரும்பப் பெற வைப்பது, ஆணாதிக்க, சாதிய பாகுபாட்டு அணுகுமுறை எதிர்ப்பு ஆகிய கோரிக்கைகளுக்காக தொடர்ந்து போராட பொதுக் குழு முடிவு செய்தது.

**– முருகன்**








MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.05.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

















Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh